பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 20 சனிக்கிழமை 06.12.2025 கதிர் 028

## இனி இது ரகசியம் அல்ல!

வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தொடக்க நிதி 25 ஆயிரம் ரூபா யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களுக்கும் வழங்கப்படுவது தொடர்பில் சமூக ☞ 2

# ஆளும்தரப்பின் அலட்சியத்தால்தான் பேரிடர் இழப்பு மிக மிக அதிகமானது

### அதனை விசாரிக்க குழு வேண்டும் என்கிறது ஐ.ம.ச.

ஆளும்தரப்பின் அலட்சியத்தால்தான் பேரிடரின்போது உயிரிழப்புகள் மற்றும் சொத்துசேதங்கள் தீவிரமடைந்தன. ஆகவே இது குறித்து முறையான விசாரணைகளை மேற்கொள்ள விசேட குழுவொன்றை நியமிக்க வேண்டும். அதேபோல் நெருக்கடியான நிலையின்போது நீர்பாசனத்துறை திணைக்களம் செயற்பட்ட விதம் குறித்து ஆராயவும் குழு ஒன்றை நியமிக்க வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்டத்துறை, சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி , திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேரிடர் நிலமையை முகாமைத்துவம் செய்வதில் ஆளும்தரப்பு தோல்வியடைந்துள்ளது. அதேபோல் அரச அதிகாரிகளின் சுயாதீனத்தன்மை இல்லாதொழிக்கப்பட்டுள்ளதால் அரச அதிகாரிகள் சிறந்த முறையில் செயற்படவில்லை. இதற்கு ஆளும்தரப்பே பொறுப்புக் கூற வேண்டும்.

பேரிடர் நிலமை குறித்து வளிமண்டல திணைக்களம் விடுத்த முன்னெச்சரிக்கை ☞ 6

# உயிரிழப்பு எண்ணிக்கை 607ஆக திடீரென உயர்வு

'தித்வா' புயல் நாட்டில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தி ஒரு வாரம் கடந்துள்ள நிலையில், உயிரிழப்புக்கள் சடுதியாக 607 ஆக உயர்வடைந்துள்ளன. அதேவேளை 214 பேர் காணாமல் போயுள்ள நிலையில், 20 இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் பகுதியாக மற்றும் முழுமையாக 71 669 வீடுகளும் சேதமடைந்துள்ளதாக பேரிடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றிரவு வரை 20 மாவட்டங்களில் 607 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளனர். இவற்றில் அதிகளவான உயிரிழப்புக்கள் கண்டி மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளன.

இம்மாவட்டத்தில் மாத்திரம் 232 பேர் உயிரிழந்துள்ளனர். அடுத்ததாக நுவரெலியாவில் 89 பேரும், பதுளையில் 83 பேரும் உயிரிழந்துள்ளனர். மேலும் கண்டியில் 81 பேரும், நுவரெலியாவில் 35 பேரும், பதுளையில் 28 பேரும் காணாமல் போயுள்ளனர்.

இதேவேளை காலி மற்றும் திருகோணமலை தவிர்ந்த ஏனைய 23 மாவட்டங்களிலும் 4,164 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. சகல மாவட்டங்களிலும் 67, 505 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இந்நிலையில் 43 ,715 குடும்பங்களைச் சேர்ந்த 1,52, 537 பேர் 1,211 இடைத்தங்கல் முகாம்களில் தங்க ☞ 6

# முழு வீடழிவுக்கு ரூ. 50 லட்சம் காணி வாங்கவும் ரூ. 50 லட்சம்

### உதவித் தொகைகளை அறிவித்தார் அரசுத் தலைவர்



பேரிடரால் வர்த்தகக் கட்டடங்கள் சேதமடைந்திருந்தால் மதிப்பீடுகளுக்கு அமைய 50 இலட்சம் ரூபா வரை வழுங்கப்படும். முழுமையாகச் சேதமடைந்த வீடுகளுக்கு, வீடு கட்டிக் கொள்வதற்கு 50 இலட்சம் ரூபா வழுங்கப்படும். காணி இல்லையாயின் பாதுகாப்பு பகுதிகளில் அவர்களுக்கு காணி வழுங்கப்படும். அரச காணி இல்லாவிடின் காணி ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு 50 இலட்சம் ரூபா வழுங்கப்படும். பகுதியளவில் சேதமடைந்த வீடுகளை சீரமைப்பதற்கு உயர்ந்தபட்சமாக 25 இலட்சம் ரூபா வழுங்கப்படும். அதேபோல் உயிரிழந்தவர்களின் உயிரை மதிப்பிட முடியாது. இருப்பினும் அவர்களின் குடும்பங்களுக்கு 10 இலட்சம் ரூபா வழுங்கப்படும். தற்போதைய இக்கட்டான நிலையில் பொதுக் கொள்கையின் அடிப்படையில் செயற்படுவோம். ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்று பிளவுப்படாமல் தேசிய சபையாக செயற்பட டுவதற்கு வாருங்கள் என்று அரசுத் தலைவர் அநுரகுமார நாடாளுமன்றத்தில் ☞ 2

# இலங்கையை மீளக்கட்டியெழுப்ப தவறின் அநுர ஆட்சியும் கவிழும்

### இராதாகிருஷ்ணன் எம்.பி. கண்டிப்பு

இலங்கையை மீளக் கட்டியெழுப்ப ஆளும்தரப்பு முறையான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கத் தவறினால் மைத்திரி, கோட்டாபய ஆட்சி கவிழ்ந்ததைப் போன்று அநுர ஆட்சியும் கவிழ்வதை எவராலும் தடுக்க முடியா தென தமிழ் முற்போக்குக் கூட்டணி உறுப்பினர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு, வர்த்தக வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பொருளாதாரத்தை வளர்த்தெடுத்தால் மட்டுமே நாங்கள் இந்த நாட்டில் வாழ முடியும். நாடு வளமாக இருக்க வேண்டுமாயின் இதுபோன்ற பேரிடர் நேரத்தில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். இந்த நேரத்தில் சில விடயங்களை குறிப்பிட வேண்டும்.

மைத்திரிபால சிறிசேனவுக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் ஆட்சி இல்லாமல் போனது. உர விடயத்திலேயே கோதாபய ராஜபக்சவின் ஆட்சி இல்லாமல் போனது. அதுபோன்று அநுரகுமாரவின் ஆட்சி இந்தப் பேரிடரினால் இல்லாமல் போகக்கூடாது என்பதனை கூறிக்கொள்கின்றோம்.

அவ்வாறன நிலை ஏற்பட்டால் எங்களால் காப்பாற்றவும் முடியாது. பேரிடர் விடயத்தில, நீங்கள் முழுமையாக வேலைகளை செய்யாவிட்டால் உங்களுக்கும் இதே நிலமை ஏற்படும், அதனை யாராலும் தடுக்க முடியாது - என்றார்.

# பேரிடர் முகாமை நிதியத்திற்கு இனிமேல்தான் சட்ட அனுமதி

### பெறப்படும் என்கிறார் நிதிப் பிரதி அமைச்சர்

அரச நிதி முகாமைத்துவத்து சட்டத்துக்கு அமைவாகவே நிதி நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். புதிதாக உருவாக்கப்பட்ட நிதியம் குறித்தும் எதிர்க்கட்சியினர் மாறுப்பட்ட கருத்துக்களை குறிப்பிடுகிறார்கள். இந்த நிதியத்துக்குரிய சட்ட அங்கீகாரம் வெகுவிரைவில் பெற்றுக்கொள்ளப்படும். பேரிடருக்கு பின்னர் ஆளும்தரப்பு ஏதும் செய்யவில்லை என்றும் எதிர்க்கட்சியினர்தான் ☞ 6

# பேரிடர் முகாமைத்துவச் சபையை கூட்டுவதற்கு அநுர தவறிவிட்டார்

### கபீர் ஹாசிம் எம்.பி. குற்றச்சாட்டு

பேரிடரை முகாமைத்துவம் செய்யும் அதிக அதிகாரம் பேரிடர் முகாமைத்துவச் சபைக்கே இருக்கிறது. ஆனால் பேரிடர் தொடர்பில் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டபோதும் அந்தச் சபையைக்கூட்டி, நடவடிக்கை எடுப்பதற்கு அரசுத் தலைவர் தவறி இருக்கிறார். ☞ 6

# அபிவிருத்தி அலுவலர்கள் இனி ஆசிரியர்களாக நிமிக்கப்படுவர்

### பிரதமர் நேற்று அறிவிப்பு

அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர்களாக நியமிப்பதற்கு தடையாக இருந்த வயதெல்லை உள்ளிட்ட விடயங்களுக்கு நீதிமன்ற தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அரச சேவை மற்றும் அரச சேவை அல்லாத பட்டதாரிகளை விரைவில் ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். ☞ 6

# யாழ். மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பேரிடர் உதவி நிதியில் சந்தேகம்

### கிளப்பினார் கஜேந்திரகுமார் எம்.பி.

இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்காக யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் எழுகின்றன. இதனால் இந்த நிதி ஒதுக்கிடு தொடர்பில் வெளிப்படைத்தன்மையுடன் ஆளும்தரப்பு செயற்பட வேண்டுமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்டத்துறை, சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி , திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது விவசாயத்துறையில் நுவரெலியா முழுமையாக ☞ 6

## இனி இது .....

வலைத்தளங்களில் கடுமையான விமர்சனங்கள் எழுந்து ஒரு சில நாள்களாகிவிட்டன. அதில் மிக முக்கியமானது நெடுந்தீவில் 2024 மதிப்பீட்டாய்வின்படி 893 வீடுகள் மட்டுமே இருக்க, 1216 வீடுகளுக்கு இழப்பீடு வழங்கப்படுவதாகப் பட்டியலிடப்பட்டு பணமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நேற்று நாடாளுமன்றம் வரையில் இந்தப் பிரச்சினை சென்றுவிட்டது. ஆளும் என்பிபி தரப்பினரின் அழுத்தங்களாலேயே இதுபோன்று யாழ்ப்பாணத்தில் அளவுக்கதிகமான இழப்பீட்டுக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது என்கிற குற்றச்சாட்டுக்களும் எழத் தொடங்கிவிட்டன. ஆனாலும் யாழ். மாவட்ட அதிகாரிகள் இது தொடர்பில் இதுவரையில் வாய் திறக்கிறார்கள் இல்லை.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து கொழும்புக்கு அனுப்பப்பட்ட பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான பட்டியலுக்குப் பொறுப்பானவர் யாழ். மாவட்டச் செயலர் பிரதீபன்தான். அவர்தான் இந்த மோசடிக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர். மக்களுக்கு விளக்கம் சொல்ல வேண்டியவர். ஆனால், அவர் இது தொடர்பில் எந்தவொரு விளக்கத்தையும் இதுவரையில் வெளியிடவில்லை. ஊடகங்களுக்கு அவர் வழங்கிய தகவலில் சரியான பயனாளிகளுக்கு இந்தப் பணம் போய்ச் சேர்வது உறுதிப்படுத்தப்படும் என்று மட்டுமே நேற்றுத் தெரிவித்திருந்தார். கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், பேரிடர் உதவி அலுவலர் ஆகியோரின் பரிசீலனை மற்றும் உறுதிப்படுத்தல்களின் பின்னரே பாதிக்கப்பட்டவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களின் பட்டியலை பிரதேச செயலகங்களிலே காட்சிப்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சேத மதிப்பீடுகள் தொடர்பில் அவசர அவசரமாக விவரங்கள் திரட்டப்பட்டபோது கிராம அலுவலர்களால் வழங்கப்பட்டு பிரதேச செயலர்களால் கொடுக்கப்பட்ட விவரங்களையே தான் அனுப்பி வைத்தார் என்பதாகத் தன்னைத் தொடர்புகொண்ட பத்திரிகையாளர்கள் சிலருக்கு அவர் அரசு முறையில் அல்லாது பதில் அளித்துள்ளார் என்று அறியவந்தது.

அது உண்மையாக இருந்தால் தவறிழைத்த அல்லது தமது கடமையைச் சரிவர நிறைவேற்றாத பிரதேச செயலர் மற்றும் கிராம அலுவலர்கள் மீது என்ன ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதையும் அவர்கள் மீது ஊழல் மோசடிக் குற்றச்சாட்டு ஏன் பதிவு செய்யப்படவில்லை என்பதையும் அவர் விளக்கவேண்டும். இது ஒன்றும் தெரியாத்தனமாக நடந்துவிட்ட தவறு என்று யாரும் விட்டுவிடமுடியாது. இதுவரை தெரியாமல் நடந்துவந்த மோசடி ஒன்று இப்போது அம்பலமாகிவிட்டது என்றே எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

பல அதிகாரிகள், பல மட்டப் பரிசோதனைகளின் பின்னரே யாழ்ப்பாணத்தில் அரசியல் தேவை, நோக்கங்களுக்காகப் பல மோசடிகள் நடக்கின்றன என்பது கடந்த காலங்களிலேயே நிரூபிக்கப்பட்ட ஒன்று. இழப்பீடு விடயத்தில் யாழ். மாவட்டச் செயலராக முன்னர் பதவி வகித்த ஒருவர் மோசடி செய்தது கூட நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அவர் போர்க் காலத்தில் தனது வீடு சேதமடைந்தமைக்காக இரண்டு தடவைகள் அரச நிதி உதவியைப் பெற்றார். பின்னர் அது கண்டுபிடிக்கப்பட்டு ஒரு தொகையை மீளச் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது. கண்டுபிடிக்காமல் போயிருந்தால் அது 'அபேஸ்' செய்யப்பட்டிருக்கும்.

அதுபோன்றே இப்போது இந்த விவகாரமும் கண்டுபிடிக்கப்படாமல் போயிருந்தால், 323 வீடுகளுக்கான சுமார் 80 லட்சம் ரூபாய் யாருடைய 'பொக்கட்டுக்களை' போய்ச் சேர்ந்திருக்கும்? நெடுந்தீவுக் கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன என்று அறிக்கையிட்டதுபோக, மேலும் வீடுகளின் எண்ணிக்கையைச் சேர்த்ததால் மட்டுமே இப்போது இந்த விவகாரம் மாட்டிக்கொண்டது. அதுவும் நெடுந்தீவைச் சேர்ந்த ஒருவர் தனது வீடு வெள்ளத்தில் பாதிக்கப்படவில்லை அதனால் தனக்கு அரசின் நிதி வேண்டாம் என்று முகப் புத்தகத்தில் எழுதப்போக, இந்த விவகாரம் சூடு பிடித்தது.

இது வெறுமனே தகவல் பிழை மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தவர்கள் இவ்வாறுதான் எரிகிற வீட்டில் பிடுங்கினது இலாபம் என்று செயற்படுவார்கள் என்கிற எண்ணத்தையும் மற்றவர்களிடம் ஏற்படுத்தக் காரணமாகியிருக்கிறது. ஆனால் இதைச் செய்த அதிகாரிகள் எந்த வெட்கமுமின்றி அமசடக்காகத் தமது பணியில் தொடர்கிறார்கள். அதற்கு ஊழலை ஒழிப்போம் என்று கூறிக்கொண்டு பதவிக்கு வந்த அரசியல்வாதிகள், அமைச்சர்களும் துணை போகிறார்கள் என்பது சாபக்கேடு.

இத்தகைய குற்றங்களுக்கு உடனடியாக குறைந்தபட்ச ஒழுக்காற்று நடவடிக்கைகளையாவது ஆளும்தரப்பு எடுக்கவில்லை என்றால் அது அரச அதிகாரிகளுக்குத் தவறான முன்னுதாரணத்தையே கொடுக்கும். விரைவில் இது தொடர்பில் ஒரு முழுமையான விசாரணைக் குழு அமைக்கப்பட்டு உண்மைகள் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கின்றோம்.

கடைசியில் தவறை நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் இருக்கும் 'சப்ஜெக்ட்' கிளாக்கின் தட்டச்சுத் தவறு என்று கண்டுபிடிக்கும் கண்துடைப்பு இல்லாது, நேர்மையான விசாரணை நடக்கும் என்றும் எதிர்பார்ப்போம். ஊழல் நடக்க அனுமதிக்கமாட்டோம், மீதிப் பணம் திருப்பி அனுப்பப்படும் என்பதெல்லாம் ஊழல் முயற்சி பிடிபட்ட பின்னர் தெரிவிக்கப்படும் உறுதிமொழிகள். எடுக்கப்பட்ட ஊழல் முயற்சிக்கு என்ன நடவடிக்கை என்பதுதான் இங்குள்ள கேள்வி..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## முழு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகிரங்க அழைப்பு விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்டத்துறை, சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இம்முறை முழு நாடும் பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ளது. பல உயிர்களை இழந்துள்ளோம். நாட்டு மக்களின் மனம் வேதனையால் நிரம்பியுள்து. வேதனையைக் கண்ணீரால் வெளிப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. பலர் காணாமல் போயுள்ளார்கள். இறந்தவர்களின் உடல்கள் கூட கிடைக்கவில்லை. இது சமூகத்துக்கும் பெரும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. காணாமல் போதலில் வேதனையை நாங்கள் நன்கு அறிவோம். இந்த வேதனை எனக்கும் உண்டு. ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தில் மனதில் வேதனையுடன் அனைவருக்கும் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன். ஆளும்தரப்பு என்ற அடிப்படையிலும் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களை மீட்கும் பணிகளில் ஈடுபட்ட போது விமானி நிர்மல சியம்பலாபிட்டிய வீரச் சாவடைந்துள்ளார். அதேபோல் சுண்டிக்குளம் பகுதியில் ஐந்து கடற்படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டபோது காணாமல் போயுள்ளார்கள். வடக்கு அரசியல்வாதிகள் இதனை விளங்கிக்கொள்ள வேண்டும். இவர்களை இன்றும் கண்டுப்பிடிக்கவில்லை. அதேபோல் தர்மதாச எனும் பொலிஸ் பணியாளர் உயிரிழந்துள்ளார். அதேபோல் அனுருத்த குமார எனும மின் சேவையாளர் உயிரிழந்துள்ளார். இவர்கள் அனைவரும் மக்களுக்காக உயிரிழந்துள்ளார்கள். இவர்களின் இழப்பு நாட்டுக்கானதே,

அரச அதிகாரிகள் மக்களைப் பாதுகாக்கப் போராடிக் கொண்டிருக்கும்போது குளிர் அறையில் இருந்தவாறு சென்றவர்கள் அரச அதிகாரிகளை கேள்விக் கேட்கிறார்கள். இது முற்றிலும் தவறானது. நெருக்கடியான நிலையில் அரச அதிகாரிகள், சுகாதார சேவையாளர்கள் செயற்பட்ட விதத்தை வரவேற்கிறேன்.

### சட்டத்தின் குறைப்பாடு

நெருக்கடியான நிலையில் அவசர காலச் சட்டத்தை அமுல்படுத்தினேன். எதிர்கட்சிகளின் உறுப்பினர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். 7 ஆண்டுகளுக்கு பின்னரே கடந்த ஓகஸ்ட் மாதம் தேசிய பேரிடர் சபை கூடியது. பேரிடர் முகாமைத்துவச் சட்டத்தில் குறைபாடுகள் காணப்படுகின்றன. ஆகவே அந்தச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்று அந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவரும் அந்த கூட்டத்தில் கலந்துக் கொண்டார்.

தற்போதைய இக்கட்டான நிலையில் பேரிடர் முகாமைத்துவ சட்டத்தை செயற்படுத்துவது பொறுத்தமற்றது என்று உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரே பொதுமக்கள் பாதுகாப்புப் சட்டத்தின் பிரகாரம் அவசர காலச் சட்டத்தை அமுல்படுத்தினேன். இந்தச் சட்டத்தின் பிரகாரமே அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரை நியமித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன். ஆகவே நான் அரசமைப்பையோ அல்லது சட்டத்தையோ மீறவில்லை.

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தை மக்களின் ஜனநாயக சுதந்திரத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் பயன்படுத்தப் போவதில்லை. எவரும் அச்சமடையவேண்டும். என்னை விமர்சிப்பதை நான் ஒருபோதும் கவனத்திற் கொள்ளப்போவதில்லை. விமர்சனங்களுக்கு எதிராக சாதாரண சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியும்.

நெருக்கடியான நிலையில் மக்களை தவறாக வழிநடத்தி முரண்பாடுகளை தோற்றுவிக்க முயற்சித்தால், அவர்களுக்கு எதிராகவே இந்தச் சட்டம் பயன்படுத்தப்படும். மக்களின் ஜனநாயகத்துக்கு எதிராக பயன்படுத்த போவதில்லை. நாடாளுமன்றத்துக்குள் இருந்து கொண்டு உறுப்பினர் ஒருவர் கம்பளை பகுதியில் 1000 பேர் இறந்தார் என்று குறிப்பிட்டார். வெளியில் சென்று குறிப்பிட்டால் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வேன். மக்களை தூண்டிவிட இடமளிக்க முடியாது.

### உதவி வழங்க நடவடிக்கை

2026ஆம் ஆண்டுக்கு புதிய வரவு-செலவுத் திட்டத்தை கொண்டு வரப்போவதுமில்லை, குறை நிரப்பு பிரேரணையைக் கொண்டு வரப்போவதில்லை. 10 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 50 பில்லியன் ரூபா ஒதுக்கீட்டுக்காக குறைநிரப்பு பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்படும். சேதமடைந்த வீடுகளைத் துப்பரவு செய்வதற்காக 25 ஆயிரம் முதற்கட்டமாக வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு உரிய தளபாடங்கள் மற்றும் ஏனைய பொருட்களை கொள்வனவு செய்ய 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும். வாடகை வீட்டில் வாழ்பவர்களுக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

மண்சரிவால் பாதிக்கப்பட்டு முகாம்களில் வாழ்பவர்கள் வாடகை வீட்டில் வசிப்பதற்கு மூன்று மாதத்துக்கு 25 ஆயிரம் ரூபா வழங்கப்படும். குடும்பத்தில் இரண்டு பேருக்கு மேற்பட்டவர்கள் இருப்பார்களாயின் 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும். விவசாய உற்பத்தியை மேம்படுத்த ஒரு ஏக்கர் நிலத்துக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும்.

அழிவடைந்துள்ள 1 இலட்சத்து 60 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பும் மீண்டும் விவசாய நிலமாக மாற்றப்படும். அதேபோல் மரகறி உற்பத்திக்கு 1 ஏக்கர் நிலத்துக்கு 2 இலட்சம் ரூபா வழங்கப்படும். விவசாயிகள் துவண்டுவிடக்கூடாது. மீண்டுவரவேண்டும். முழுமையான ஒத்துழைப்பு வழங்குவேன்.

பாதிக்கப்பட்டுள்ள விலங்கு வேளாண்மையில் ஈடுபடுபவர்களுக்கு 2 இலட்சம் ரூபா வழங்கப்படும். அதேபோல் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு 2 இலட்சம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும். வங்கி அடிப்படையில் தொழில் முயற்சியாளர்களுக்கு உதவியும் வழங்கப்படும். அதற்குரிய சுற்றறிக்கையை மத்திய வங்கி வெளியிடும். காப்புறுதி நிறுவனங்களும் உதவி வழங்கும் அதற்குரிய அறிவுறுத்தல்கள் வெளியிடப்படும்.

பதிவு செய்யப்பட்டுள்ள மீன்பிடிப் படகுகள் முழுமையாக சேதமடைந்திருந்தால் ஒரு படகுக்கு தலா 4 இலட்சம் ரூபா வழங்கப்படும். பாடசாலை மாணவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா வழங்கப்படும். 'அஸ்வெசும' திட்டத்தின் ஊடாக 6 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும். எமது மாணவர்களுக்கு நாங்கள் வழங்குவோம். கல்விக்கான நிதி செலவல்ல, அது சிறந்த முதலீடு.

வர்த்தக்கக கட்டடங்கள் சேதமடைந்திருந்தால் மதிப்பீடுகளுக்கு அமைய 50 இலட்சம் ரூபா வழங்கப்படும். முழுமையாகச் சேதமடைந்த வீடுகளுக்கு, வீடு கட்டிக் கொள்வதற்கு 50 இலட்சம் ரூபா வழங்கப்படும். காணி இல்லையாயின் பாதுகாப்பு பகுதிகளில் அவர்களுக்கு காணி வழங்கப்படும். அரச காணி இல்லாவிடின் காணி ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு 50 இலட்சம் ரூபா வழங்கப்படும்.

பகுதியளவில் சேதமடைந்த வீடுகளை சீரமைப்பதற்கு உயர்ந்தபட்சமாக 25 இலட்சம் ரூபா வழங்கப்படும். அதேபோல் உயிரிழந்தவர்களின் உயிரை மதிப்பிட முடியாது. இருப்பினும் அவர்களின் குடும்பங்களுக்கு 10 இலட்சம் ரூபா வழங்கப்படும்.

இதற்காக, நாடாளுமன்றத்துக்கு தற்போது சமர்ப்பித்துள்ள கடன் பெறும் எல்லை ஒருபோதும் திருத்தம் செய்யப்படமாட்டாது. 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 50 பில்லியன் ரூபாவுக்கான குறை நிரப்பு பிரேரணை கொண்டுவரப்படும். இந்தக் குறைநிரப்பு பிரேரணைக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### சீரமைப்புப் பணிகள்

சேதமடைந்த பாதைகள், பாலங்களை சீரமைக்க விசேட கவனம் செலுத்த வேண்டும். எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் பிரதான பாதைகள், பாலங்கள் சீரமைக்கப்படும். இன்னும் இரண்டு வாரங்களுக்குள் மின்விநியோக கட்டமைப்பு வழமைக்குத் திரும்பும், நீர் விநியோகம் சீரமைக்கப்படும். தொடருந்துப் பாதைகள் வெகுவிரைவில் சீரமைக்கப்படும்.

இயற்கைப் பேரிடரால் ஏற்பட்டுள்ள அழிவில் இருந்து வெகுவிரைவில் மீள்வதற்கு அரசுத் தலைவர் செயலணி ஒன்று உருவாக்கப்படும். அது சட்டத்தின் பிரகாரம் செயற்படுத்தப்படும். நிதி முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம் இந்த நிதியம் உருவாக்கப்படும். தற்போது நிதியைச் சேமிப்பதற்கான குழு மாத்திரமே நியமிக்கப்பட்டுள்ளது. இதனால்தான் அயலுறவுத்துறை அமைச்சின் பணிப்பாளர் உறுப்பினராக அங்கம் வகிக்கிறார். இந்தக் குழுவின் மீதும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள்.

தற்போதைய நிலையில் இருந்து மீள்வதற்கு உரிய திட்டங்களை வகுப்பதற்குத் தேவையான சட்டம் வெகுவிரைவில் இயற்றப்படும். மீட்புப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும் ஹெலிகொப்டர்கள் சிறந்த நிலையில் இல்லை. 5 விமானங்களைத் திருத்துவதற்கு விலைமனுகோரல் செய்யப்பட்டுள்ளது. விமானப் படையினர் தமது உயிரை அச்சுறுத்தலுக்குள்ளாக்கிக் கொண்டு மீட்புப் பணிகளில் ஈடுபடுகிறார்கள்.

புதிய விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் கொள்வனவு செய்யப்படும். பேரிடர் நிலைகளைத் தடுப்பதற்கு எதிர்காலத்துக்குரிய திட்டங்கள் வகுக்கப்படும். ஆறுகள், மலைகளுக்கு அருகாமையில் பெரும்பாலான வீடுகள் சட்டவிரோதமான முறையில் குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. சட்டவிரோதமான முறையில் வீடுகளை அமைப்பதற்கு எதிராக்கக கடுமையான சட்டமியற்றப்படும். கொழும்பு கொலன்னாவ பகுதியில் இவ்வாறான நிலையே காணப்படுகிறது.

அழகுமிக்க மலையகம் இன்று அழிவடைந்துள்ளது. இந்த நிலமை மீண்டும் ஏற்பட இடமளிக்கமுடியாது. இயற்கைப் பேரிடரை எவராலும் தடுக்க முடியாது. ஆனால் பேரிடரால் ஏற்படும் விளைவுகளைத் தடுக்கும் திட்டங்கள் செயற்படுத்தப்படும். இதனை தேசிய செயலாகக் கருதி எதிர்க்கட்சியினர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மக்கள் இறந்து கிடக்கும் போது அதில் அரசியல் செய்யவேண்டாம். ஆளும்தரப்புடனான பிரச்சினையை அரசியல் ஊடாக தீர்த்துக் கொள்ளுங்கள். பொருளாதாரத்தை நெருக்கடிக்குள்ளாக்கி மக்களை அழிக்க முயற்சிக்காதீர்கள். அரசியலை தேர்தல் ஊடாக தீர்த்துக் கொள்ளுங்கள். அதனைத் தவிர்த்து வேறு வழியில்லை. நிதி அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உண்டு.

அரசமைப்புக்கு அப்பாற்பட்டு நான் செயற்படவில்லை. அரசமைப்பை மீறியதாக உயர்நீதிமன்றத்தால் பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் எனக்கு அரசமைப்புப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். எமக்கு பாடம் எடுக்காமல் கொலன்னாவ பகுதிக்கு சென்று 10 பேருக்கு உணவுப் பொதிகளை வழங்குங்கள் புண்ணியமாவது கிடைக்கும்.

ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்று பிளவுப்படாமல் தேசிய சபை யாக செயற்படுவோம். தற்போதைய இக்கட்டான நிலையில் பொது கொள்கையின் அடிப்படையில் செயற்படுவோம். மக்கள் ஏன் நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தார்கள் என்பதை மீள்பரிசீலனை செய்யுங்கள் - என்றார்.


JDr
JDR CARE HOME
&
MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வெள்ளை அறிக்கை அவசியம்

'தித்வா' புயல் இலங்கையின் சமீபத்திய வரலாற்றில் கணிசமான அழிவை ஏற்படுத்திய இயற்கை பேரிடர். பல மாகாணங்களில் வீடுகள் இழந்தன. மக்கள் ஆதரவற்றவர்களாக விட்டுச் செல்லப்பட்டனர். நிலச்சரிவு, வெள்ளப்பெருக்கு, உடைந்த அணைகள், சேதமடைந்த சாலைகள் ஆகியவை சாதாரண வாழ்வின் ஒவ்வொரு அடியிலும் ஆபத்தை உருவாக்கின. இவ்விதமான சூழலில், ஆளும்தரப்பு முன்கூட்டியே எவ்வாறு செயல்பட்டது? சட்டப்படி எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியிருந்தது? ஏன் அவை செய்யப்படவில்லை? என்ற கேள்விகள் இன்றைக்கு மக்களின் மனதில் மிகத் துல்லியமாக எழுந்திருக்கின்றன.

கார்த்திகை 25 முதலே வானிலைத் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்திருந்தது. புயல் தீவிரமாவதற்கான எல்லா குறியீடுகளும் அந்த நேரத்திலேயே கிடைத்திருந்தன. அது தவிர சில பன்னாட்டு ஊடகங்களும்கூட அளவுக்கதிகமான மழை பெய்யும் வாய்ப்புக் குறித்து செய்தி வெளியிட்டிருந்தன. இருந்தபோதும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் அரசு பங்குகொள்ளாமல் இருந்தது என்பது இன்றைய மிகக் கனமான குற்றச்சாட்டாகும்.

குறிப்பாக, வானிலைத் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சின் கீழும், பேரிடர் மேலாண்மை மையம் நேரடியாக அரசுத் தலைவர் அனுரகுமாரவின் கீழும் செயல்படுகின்றன. இவ்விரண்டு முக்கியமான துறைகளும் ஒரே எச்சரிக்கையை வழங்கியிருந்தபோதும், அவற்றை ஒருங்கிணைக்கும் அரசியல்மற்றும்நிர்வாகக்கருவிகள்செயலிழந்துபோனமையேஇந்தளவுக்கு மக்களின் உயிர்கள் இழக்கப்படக் காரணமாக அமைந்துவிட்டது என்பதே தற்போதைய குற்றச்சாட்டு. அதில் நியாயமும் உண்டு.

### அரசின் கடமை

'பேரிடர் மேலாண்மைச் சட்டம்– எண் 13 /2005' இல், நாடு முழுவதையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பேரிடர் மேலாண்மைத் திட்டத்தைத் தயாரிக்க அரசுக்கு கட்டாய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. சர்வதேச அமைப்புகளோடு இணைந்து செயல்படுதல், முன்னறிவிப்புகள், மத்திய அரசிலிருந்து கிராம நிலை அரச இயந்திரங்களைத் தயார்ப்படுத்தல், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, தங்குமிடம் வழங்குதல் ஆகியவை இதில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன.

அத்தகைய சட்டப்பூர்வ கடமைகள் இருந்தபோதும், முக்கியமான பேரிடர் மேலாண்மை குழு கார்த்திகை 23 வரை கூடவில்லை. வருடத்திற்கு நான்கு முறைகூட வேண்டிய தேசிய நிர்வாக குழுவோ இவ்வருடம் ஒரு முறைகூட கூடாதது மிகப் பெரும் அலட்சியத்தின் சான்றாகும். ஆடி 16 அன்று கொழும்பில் நடத்தப்பட்ட பேரிடர் தொடர்பான பட்டறை வெறும் நிகழ்வாகவே முடிந்தது. அதில் இருந்து அரசுக்கு ஏதேனும் திட்டம் உருவானதா என்ற கேள்விக்கு பதில் இல்லை.

தாமதத்தை மறுக்க முடியாது

— சிவப்பு எச்சரிக்கை: காரத்திகை 25
— பேரிடர் குழு நியமனம்: கார்த்திகை 27
— அரசு ஊழியர்களுக்கு விடுமுறை அறிவிப்பு: கார்த்திகை 28
— பேரிடர் மேலாண்மை பணிப்பாளர் நியமனம்: கார்த்திகை 29

இந்தஅடுக்குமுறைநடவடிக்கைகள்அனைத்தும்புயல்ஏற்கெனவேமனித உயிரைப் பறித்து, வீடுகளைச் சிதைத்து, மக்கள் தஞ்சமின்றி அலைந்த பின் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன என்பதைத் தெளிவாக்குகின்றது. தாமதம் என்பது இங்கு வெறும் நிர்வாகப் பிழையாக இல்லாது, நேரடியாக மனித உயிரிழப்புக்கான காரணிகளில் ஒன்றாகவே மாறியுள்ளது.

பேரிடர் நிலையை அறிவிப்பது அரசுத் தலைவருக்கு வழங்கப்பட்ட அதிகாரம். இத்தகைய அறிவிப்பை தாமதப்படுத்துவதும், விலக்கிப்போடுவதும் அரசியல் தவறாக மட்டுமல்ல, உச்ச நீதிமன்ற தீர்ப்பின் படி அரசியல் பொறுப்பு மீறலும், அரசியல் சட்ட மீறலுமாகும்.

### வெளிப்படைத்தன்மையற்ற நிர்வாகம்

இன்றளவும் பேரிடர் முகாமைத்துவ மையத்தின் ஊடகப் பிரிவில் இருந்து எந்தத் தெளிவான விளக்கமும் இதற்குக் கிடைக்கவில்லை. அரசின் பல பொறுப்பாளர்களும் அமைதியைத் தேர்ந்தெடுத்துள்ளனர். ஆனால் இழந்தவை வீடுகள் மட்டும் அல்ல; மக்களின் நம்பிக்கையும் மரியாதையும் ஆகும். அவற்றைவிட மேலாக மக்களின் உயிர்களுமாகும்.

இந்த சூழ்நிலையில், நாட்டு மக்கள் எதிர்பார்ப்பது ஒன்றே ஒன்று உண்மை வெளிச்சமிடப்பட வேண்டும்.

### வெள்ளை அறிக்கை தேவை

என்ன தவறு நடந்தது? ஏன் சட்டப்படி செய்ய வேண்டிய நடவடிக்கைகள் தாமதமாகின? எந்தத் துறையில் ஒருங்கிணைப்பு தோல்வியடைந்தது? முன்னறிவிப்புகளைப் புறக்கணித்தது யார்? தடுக்கக்கூடிய உயிரிழப்புகள் ஏன் தடுக்கப்படவில்லை?

இந்தக் கேள்வுகளுக்கான பதில் அரசின் உள் குறிப்புகளில் அல்ல; மக்களுக்குப் முன் வைக்கப்படும் ஒரு சுயாதீன விசாரணைக் குழு மற்றும் அதன் வெள்ளை அறிக்கை மூலமே கிடைக்க முடியும்.

இவ்வாறு திறந்தவெளிப் பொறுப்புணர்வோடு செயல்படுவதால் மட்டுமே,

— எதிர்கால பேரிடர்களில் மக்கள் உயிரை பாதுகாப்பது சாத்தியம்,
— அரசின் நிர்வாகம் மீதான நம்பிக்கை மீண்டும் உருவாகும்,
— சட்டத்தின் ஆட்சி செயலில் இருப்பதை இலங்கை உணரும்.

அரசின் பொறுப்பு நிறைவேறியதா, ஏமாற்றப்பட்டதா என்பதைத் தெரிந்துகொள்ள இந்த வெள்ளை அறிக்கை அவசியம். இதுவே நாட்டின் நலனுக்கும், ஜனநாயகத் தெளிவுக்கும் இன்றைய மிக அவசரமான தேவை.

# யாழ். மாநகர சபையின் பாதீடு வெற்றிகரமாக நிறைவேற்றம்

## என்பிபியோடு சேர்ந்து தமிழ் காங்கிரஸ் எதிர்ப்பு

யாழ்ப்பாண மாநகர சபையின் பாதீடு நேற்று 2 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மாநகர சபை முதல்வர் மதிவதனியால் முன்வைக்கப்பட்டது. ஆதரவாக 23 வாக்குகளும், எதிராக 21 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

தேசிய மக்கள் சக்தி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பாதீட்டுக்கு எதிராக வாக்களித்தனர்.

பாதீட்டுக்கு ஆதரவாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உள்ளிட்ட சில கட்சி உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

# யாழ். உள்ளக விளையாட்டரங்க பணியை இடைநிறுத்த கட்டளை

## நீதிமன்றம் நேற்று வழங்கியது

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் அமைக்கப்படும் உள்ளக விளையாட்டரங்கின் பணிகளை உடனடியாக நிறுத்துமாறு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடை கட்டளை வழங்கியுள்ளது.

இந்தக் கட்டளையை உடனடியாகச் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு அனுப்பிவைக்குமாறும் மன்று உத்தரவிட்டுள்ளது

யாழ்ப்பாணம் பழைய பூங்கா பகுதியில், 12 பரப்பளவு காணியைக்கையகப்படுத்திஅதில்உள்ளகவிளையாட்டரங்கினை அமைக்க அண்மையில் அடிக்கல் நாட்டப்பட்டது.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் சுமார் 370 மில்லியன் ரூபாய் செலவில் இந்த விளையாட்டரங்கு அமைக்கப்படவுள்ளது. நவம்பர் 23 விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே, சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன் மற்றும் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் பிரதீபன் ஆகியோர் இதற்கான அடிக்கல்லை நட்டு வைத்தனர்.

பழைய பூங்காவில் நூற்றாண்டு காலப் பழமையான மரங்கள் காணப்படும் நிலையில் , அவற்றை அழித்து உள்ளக விளையாட்டரங்கு அமைக்கக் கூடாது எனப் பலரும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில், பழைய பூங்காவில் அமையவுள்ள விளையாட்டரங்கினை உடனடியாக நிறுத்துமாறு கோரி வழக்கு தொடரப்பட்டது.

தமிழ் அரசுக் கட்சி சார்பில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட கிருஷ்ணவேணி நீதிமன்றத்தில் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். அரசுத் தலைவர் சட்டத்தரணி சுமந்திரன் மனுதாரர் சார்பில் நீதிமன்றத்தில் முற்பட்டு வாதாடினார்.

வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை மன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுதாரர் தரப்பு வாதங்களைக் கேட்ட பின்னர் மைதானம் அமைக்கும் பணிகளை உடன் நிறுத்துமாறு 14 நாட்களுக்கு இடைக்கால தடை கட்டளையை வழங்கிய யாழ். மாவட்ட நீதிபதி சிவகுமார், எதிர்தரப்பினர் தமது ஆட்சேபணைகள் , பதில்களை முன் வைக்கவும் கால அவகாசம் வழங்கினார்.

யாழ்ப்பாணம் அரச அதிபராக இருந்த டைக் பேர்சிவல் என்பவர்தமதுசொந்தக்காணியானஇந்தப்பிரதேசத்தைப்பொதுச் சொத்தாகப் பயன்பட எழுதி வைத்திருந்தார். இது தொடர்பில் நம்பிக்கை நிதியம் ஒன்றும் உருவாக்கப்பட்டிருந்தது. இந்தப் பொதுச் சொத்தைப் பாதுகாக்கும் விடயத்தில் தவறிழைத்து நம்பிக்கை நிதியப் பூங்காவை அழித்து, உள்ளக விளையாட்டு அரங்கு ஒன்றை அமைக்க முற்படுகின்றனர் எனசுமந்திரன் வாதங்களைச் சமர்ப்பித்தார்.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் செம்மணி, அல்லைப்பிட்டி, மண்டைதீவுஆகியபகுதிகளில்இத்தகையஉள்ளகவிளையாட்டு அரங்குகளை நிறுவுவதற்கான விரிவான அறிக்கைகளை நகர அபிவிருத்தி அதிகார சபை சமர்ப்பித்திருக்கும் நிலையில், அவற்றைப் புறக்கணித்து, இந்த நம்பிக்கை நிதியச் சொத்தை அழித்து, அதன் நோக்கத்தைப் பாழாக்கி, இந்த உள்ளக விளையாட்டு அரங்கை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக சுமந்திரன் மன்றுக்குத் தெரிவித்தார்.

1990 - 1995 ஆம் ஆண்டு காலப் பகுதியில் குடாநாடு விடுதலைப்புலி களின் கட்டுப்பாட்டில் இருந்தபோது கூட இந்தப் பூங்காவைக் கட்டிக் காப்பதில் அவர்கள் அதீத சிரத்தை எடுத்தார்கள்என்பதையும்மனுதாரரின்சட்டத்தரணிமன்றுக்குச் சுட்டிக்காட்டி இருந்தார். அவரின் வாதத்தை ஏற்றுக்கொண்டு, மேற்படி பூங்காவில் அபிவிருத்தி நட வடிக்கைகள் என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் சகல செயற்பாடுக ளையும் இடைநிறுத்துவதற்கு மன்று கட்டளை பிறப்பித்தது.

நம்பிக்கை நிதிய விவகாரம் என்பதால் குடியியல் நடவடிக்கை சட்ட கோவையின் 16ஆம் பிரிவின் கீழ் இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட எவரும் தங்களையும் இடையீட்டுத் தரப்புகளாகச் சேர்க்க விரும்பின் அதற்கு விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கும் அறிவித்தலை இந்த வழக்கில் நீதிமன்றம் விடுக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை இரண்டு வாரங்களுக்குள் கூட்டுங்கள்

## மு.கா. தலைவர் ஹக்கீம் வலியுறுத்து

நாட்டை மீள கட்டியெழுப்ப அரசுத் தலைவர் உடனடியாக செயற்பட்டு, சர்வதேச நாடுகளின் தலைவர்களுடன் கலந்துரையாடி இரண்டு வாரங்களுக்குள் சர்வதேச நன்கொடையாளர் மாநாடொன்றை கொழும்பில் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு, வர்த்தக வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில்உரையாற்றுகையிலேயேஇதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது பேரிடரினால் ஏற்பட்டுள்ள பொருளாதார இழப்பையும் சுனாமி பேரிடரினால் ஏற்பட்ட பொருளாதார இழப்பையும் ஒப்பிட்டுபார்க்கும்போது, சுனாமியால் 1 பில்லியன் டொலருக்கும் அதிக இழப்பு ஏற்பட்டது. இந்த பேரிடர்த்தில் 6 முதல் 7 பில்லியன் டொலர்கள் இழப்பு ஏற்படுள்ளதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியானால், இந்த பேரிடர் 6 தடவை சுனாமிப் பேரிடர் ஏற்பட்டதற்குச் சமமாகும். அத்துடன் இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 முதல் 5 சதவீத இழப்பாகும்.

அதனால் இடம்பெற்றுள்ள இந்த பேரிடர் தொடர்பில் சர்வதேச நாடுகளின் அவதானம் தேவை. அது இன்னும் இரண்டு வாரங்களில் வேறு பகுதிக்குத் திருப்பிவிடும். அதனால் அரசுத் தலைவர் உடனடியாக செயற்பட்டு, சர்வதேச நாடுகளின் தலைவர்களுடன் கலந்துரையாடி இரண்டு வாரங்களுக்குள் சர்வதேச நன்கொடையாளர் மாநாடொன்றை கொழும்பில் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக அரசுத் தலைவர் பயணம் மேற்கொண்ட இந்தியா, ஜப்பான், ஜேர்மன், ஐக்கிய அரபு இராச்சியம் போன்ற நாடுகள் மற்றும் கட்டார், சவூதி அரேபியா நாட்டு தலைவர்களுடன் தொடர்புகொண்டு, சர்வதேச நன்கொடை மாநாடொன்றை நடத்தி, 2,3 பில்லியன் டொலர்களை தேடிக்கொள்ள வேண்டி இருக்கிறது. அதற்கானதொரு முயற்சியை ஆளும்தரப்பு மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று எமது ஓய்வுபெற்ற தலைவர்களான ரணில் விக்ரமசிங்க, மஹிந்த ராஜபக்ச, சந்திரிக்கா குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன போன்ற அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு, ஏற்பட்டுள்ள இந்த தேசிய பேரிடர் தொடர்பில் கலந்துரையாடவேண்டும். கட்சித் தலைவர் என்ற வகையில் இந்தக் கோரிக்கையை அரசுத் தலைவருக்கு முன்வைக்கிறேன்.

முன்னாள் அரசுத் தலைவர்கள் மீது வழக்கு தொடுப்பது தொடர்பில் எங்களுக்கு பிரச்சினையில்லை. அது அவ்வாறே இடம்பெறட்டும். அதற்கு மத்தியில் இந்த பேரிடரில் இருந்து மீள நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்க்கட்சி உள்ளிட்ட அனைத்துத் தலைவர்களையும் ஒன்றிணைத்துக்கொண்டு செயற்படவேண்டும். அவ்வாறு இல்லாமல் எமக்குத் தேவையான இந்த பெரும் நிதியை தேடிக்கொள்ள முடியாது.

அவ்வாறு இல்லாவிட்டால், ஆளும்தரப்பு சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி, நாங்கள் கடன் மீள செலுத்தும் காலத்தை 3 வருடங்களுக்காவது ஒத்திவைப்பது தொடர்பில் கலந்துரையாட முடியும். இந்த இரண்டு வழிகளில் ஒன்றை நாங்கள் மேற்கொள்ள வேண்டும்.

இடம்பெற்ற வெள்ளப் பேரிடரில் கம்பொளை, மல்வானை, வெல்லம்பிட்டி, மூதுர், கின்னியா, கொலன்னாவை உள்ளிட்ட பல நகரங்கள் முற்றாக நீரில் மூழ்கி அனைத்தும் இழக்கப்பட்டுள்ளன. விசேடமாக கண்டி மாவட்டம் பெரும் சேதத்துக்கு உள்ளாகி இருக்கிறது. அதனால் கண்டி மாவட்டத்தை மீள கட்டியெழுப்ப தனியான வேலைத்திட்டத்தை நாங்கள் தயாரித்திருக்கிறோம்.

அக்குறணை ரம்புக்வெல பகுதியில் ஏற்பட்ட மணிசரிவில் 29 பேர் வரை உயிரிழந்துள்ளனர். 11 சடலங்களே மீட்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று அங்கு பல பகுதிகள் முற்றாக மண்சரிவில் புதையுண்டு அழிந்துள்ளன. அதனால் பாதிக்கப்பட்டுள்ள இந்த மக்களுக்கு விரைவாக வீடுகள் அமமைத்துக்கொடுக்க வேண்டி இருக்கின்றன. அதற்கு அரச காணிகள் இனம்கண்டு, அந்த காணிகளுக்கு கட்டட ஆராச்சிய நிறுவனத்தின் சான்றிதழ் தேவைப்படுகிறது. ஆனால் இந்த நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள கட்டட ஆராச்சி நிறுவனத்தில் போதுமான அதிகாரிகள் இல்லை. அதனால் இது தொடர்பில் ஆளும்தரப்பு கவனம் செலுத்த வேண்டும்.

எமது பல்கலைக்கழகங்களில் இருக்கும் பொறியியல் பீட பொயியலாளர்களையும் இந்த பணியில் இணைத்துக்கொண்டு, இதனை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாமல் இதனை செய்ய முடியாது. கண்டி தெல்தோட்டையில் பெரும் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. அங்கும் பெருமளவிலான வீடுகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன. என்றாலும் தற்போது சில மக்கள் போவதற்கு இடமில்லாமல் அங்கு இருக்கிறார்கள். அதனால் இந்த மக்களுக்கு மாற்றுத் தீர்வை பெற்றுக்கொடுக்க விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

# பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சியுங்கள்

## எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்து

வளிமண்டலவியல்திணைக்களம்மற்றும்பேரிடர்முகாமைத்துவ மத்திய நிலையம் மீது குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்காமல் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சிக்க வேண்டும். இந்தப் பேரழிவிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு, தவறுகளைத் திருத்திக் கொள்வதே காலத்தின் தேவையாகுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆளும்தரப்பை வலியுறுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று வெள்ளிக்கிழமை விசேட அறிக்கையொன்றை முன்வைத்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில்ஏற்பட்டபுயல்குறித்து வளிமண்டலவியல்திணைக்களம் பொதுமக்களுக்கு தகவல் தெரிவிக்கவில்லை என்று சிலர் இப்போது குற்றம் சாட்டி வருகின்றனர். ஆனால் இந்த முன்னறிவிப்பை உரிய தரப்பினர் நவம்பர் 11 முதல் வெளியிட்டு வந்தனர்.

வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரிகள் ஊடகங்கள் முன்வந்து, வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு மற்றும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக, தென்கிழக்கு கடல் பகுதிகளில் கடல் சீற்றமும், பலத்த காற்றும் வீசுவதோடு, இலங்கையின் சில பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் எச்சரித்திருந்தனர்.

இது குறித்து ஊடகங்களில் தெரிவிக்கப்பட்ட போது நாட்டில் மழை காணப்படவில்லை. வளிமண்டலவியல் திணைக்களம், பேரிடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதானிகள் மற்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பிரதானிகள் ஊடக சந்திப்புக்கள் ஊடாக எச்சரிக்கைகளை வழங்கினர். நவம்பர் 21, 22ஆம் திகதிகளில் கூட இது குறித்து அவர்களால் அறிவிக்கப்பட்டது.

பேரிடர் முகாமைத்தைவ நிலையத்தின் நடவடிக்கைகளின் செயலற்ற தன்மைக்கான காரணங்கள் என்ன? இப்போது வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் பேரிடர் முகாமைத்துவ மத்திய நிலையம் மீது குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்காமல் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சிக்க வேண்டும். மோசமான வானிலை குறித்த விடயங்களைச் சரியாக முன்வைத்த அதிகாரிகளை அச்சுறுத்துவதை விடுத்து, இந்தப் பேரழிவிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு, தவறுகளைத் திருத்திக் கொள்வதே காலத்தின் தேவையாகும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிம் வழங்கும் நடவடிக்கைகளை அரசியலாக்கவேண்டாம்.வெளிப்படைதன்மையுடன்இந்தபணிகள்முன்னெடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாகவும், விரைவான சேவைகளையும் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே, அவசரகால நிலையை பிரகடனப்படுத்துமாறு எதிர்க்கட்சி கோரியது. ஆனால் ஆளும்தரப்பு ஊடகங்களை அடக்குவதற்கு முயற்சி செய்து வருகின்றது. இவ்வாறு ஊடகங்களை அடக்குமுறைக்குட்படுத்த நாம் இந்த அவசரகால நிலையை கோரவில்லை என்றார்.

# ஆளும்தரப்புத் தவறுகளை திருத்திக்கொள்ளவேண்டும்

## அஜித் பி பெரேரா தெரிவிப்பு

2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க பேரிடர் முகாமைத்துவ சட்டத்துக்கு அமைய நாடு பேரிடர் நிலமையை எதிர்கொண்டுள்ளது என்று அரசுத் தலைவர் அறிவிக்கவில்லை. பேரிடர் முகாமைத்துவ சட்டத்தை ஆளும்தரப்பு மறந்து விட்டது. ஆளும்தரப்பு தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டும். இடர் நிலையில் எதிர்க்கட்சிகள் எவரும் அரசியல் செய்யவில்லையென ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்டத்துறை, சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி , திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடுஇயற்கைப்பேரிடர்ஒன்றைஎதிர்கொள்ளும்சந்தர்ப்பத்தில் ஆளும்தரப்பு எவ்வாறு செயற்பட வேண்டும், அரசுத் தலைவர் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது அரசமைப்புச் சட்டத்தால் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க பேரிடர் முகாமைத்துவ சட்டத்துக்கு அமைய ஆளும்தரப்பு செயற்பட்டுள்ளதா என்பது சந்தேகத்துக்குரியது.

2005 ஆம் ஆண்டு 13ஆம் இலக்க பேரிடர் முகாமைத்துவச் சட்டத்துக்கு அமைய தேசிய பேரிடர் சபை மற்றும் அதனுடனான விடயங்கள், பேரிடர் நிலை மற்றும் இழப்பீடு தொடர்பான அறிவிப்பை விடுக்கும் சபை ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்று ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் 11(1) பிரகாரம் நாடு பேரிடர் நிலமையை எதிர்கொண்டுள்ளது என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கவேண்டும். அந்த அதிகாரம் அரசுத் தலைவருக்கே உண்டு.

இச்சட்டத்தின் பிரகாரம் அரசுத் தலைவர் முழு நாடும் பேரிடர் நிலமையை எதிர்கொண்டுள்ளது என்பதை அறிவித்துள்ளரா என்பது எமக்கு தெரியவில்லை. 2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க பேரிடர் முகாமைத்துவ சட்டத்தின் 11 (3) ஆம் பிரிவில் ' சட்டத்தின் 1 ஆம் பிரிவுக்கமைய விடுக்கப்படும் அறிவிப்பு நாடாளுமன்றத்தின் பிரேரணை ஊடாக நிறைவேற்றுவதற்கு அறிவிப்பு விடுக்கப்பட்டு விரைவாகவே நாடாளுமன்றத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும் 'என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரையில் அவ்வாறான பிரேரணை சமர்ப்பிக்கப்படவில்லை. பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் பிரகாரத்தின் கீழான கட்டளைகள் மாத்திரமே நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க பேரிடர் முகாமைத்துவ சட்டத்தின் (உ) பிரிவின் ஒழுங்குவிதிகள் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இது பாரதூரமானது.

ஆளும்தரப்பின் குறைகளை மாத்திரம் சுட்டிக்காட்டுவது எமது செயற்பாடால்ல, அவ்வாறு விமர்சிப்பதால் உயிரிழந்தவர்கள் மீண்டும் வர போவதில்லை. பேரிடரின் போது அரச தரப்பினர் செயற்படுவதற்குரிய சட்ட அங்கீகாரம் வழங்க வேண்டும். பேரிடர் முகாமைத்துவ சட்டத்தை ஆளும்தரப்பு மறந்துள்ளது. இந்த சட்டத்தின் பிரகாரம் ஆளும்தரப்பு செயற்படவில்லை.

பேரிடர் உதவி தொடர்பில் சுற்றறிக்கைகள் வெளியிடுப்படுகின்றன. இது எந்த சட்டத்தின் பிரகாரம் வெளியிடப்படுகிறது என்று குறிப்பிடப்படவில்லை. ஆகவே தற்போதைய செயற்பாடுகளை ஆளும்தரப்பு சட்டத்தின் ஊடாக மேற்கொண்டு தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டும்.இந்த இடர் நிலையில் எதிர்க்கட்சிகள் எவரும் அரசியல் செய்யவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிம் வழங்க வேண்டும் என்றே வலியுறுத்துகிறோம் - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

## அபிவிருத்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் சந்தன சூரியஆரச்சி எம் பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர்களாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில். அதற்கு எதிராக ஒரு தரப்பினர் நீதிமன்றம் சென்றதால் அந்த நடவடிக்கையை இடை நிறுத்தி இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஆசிரியர் சேவைப் பிரமானக்குறிப்பு, அரசசேவை ஆணைக்குழு மற்றும் ஆளும்தரப்பு இது தொடர்பில் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்து, அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ள நீதிமன்றத்துக்கு எமது நிலைப்பாட்டை தெரிவித்திருந்தோம். அந்த வழக்கு நவம்பர் 20 முடிவுக்கு வந்துள்ளது.

உயர்நீதிமன்றம்வழங்கியுள்ளதீர்ப்பின்படி அரசசேவையில்உள்ளபட்டதாரிகள்மற்றும் அரச சேவையில் இல்லாத பட்டதாரிகளையும் வயதெல்லையை நிர்ணயம்செய்து, ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்வதற்கான வயதெல்லையை நிர்ணயம் செய்து தனித்தனியாகப் பரீட்சைகளை நடத்தி நிலவும் வெற்றிடங்களுக்காக ஆசிரியர் சேவையில் மூன்றாம் தரத்தில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் எதிர்காலத்தில் வயதெல்லையை திருத்தம் செய்து பரீட்சையை நடத்தி ஆசிரியர் சேவையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார்.

## உயிரிழப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டுள்ளதாக பேரிடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

காணாமல் போனோரை தேடுவதில் நெருக்கடி

இயற்கை பேரிடர்ங்களால் அதிகளவான பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள கண்டி மாவட்டத்தில் கம்பளை - புப்புரெஸ்ஸ, ரஜதலாவை கிராமத்தில் ஏற்பட்ட மண்சரிவில் சுமார் 20 வீடுகள் தரைமட்டமாகியுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். எனினும் நேற்று மாலை வரை மூவர் மாத்திரமே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

மண்சரிவு இடம்பெற்ற போது இரு இளைஞர்கள் அதனை அவதானித்து, அங்கிருந்தவர்களை காப்பாற்ற முயற்பட்ட போதிலும், 10 பேரை மாத்திரமே அவர்களால் காப்பாற்ற முடிந்துள்ளது.

மண்சரிவுகளுக்குள் சிக்கியிருப்பதாக சந்தேகிக்கப்படுபவர்களை மீட்பதில் பெரும் சிரமமாகவுள்ளதாகவும், அரச தரப்பிலிருந்து இதற்காக போதுமானளவு ஒத்துழைப்புக்கள் கிடைக்கவில்லை என்றும் அந்த மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

இதேபோன்று கம்பளை – குருஸ்ஸஹந்தி பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 11 பேர் காணாமல் போயிருந்தனர். நேற்றைய தினம் இராணுவத்தினருடன் பிரதேச மக்கள் இணைந்து முன்னெடுத்த மீட்பு பணிகளின் போது ஆண்கள் மூவரது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் வெலிமட - ரேந்தபொல பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி காணாமல் போனவர்களில் இருவரது சடலங்கள் மாத்திரமே மீட்கப்பட்டுள்ளன.

மொரகஹாதென்ன நீர்தேக்கத்தின் நீர் மட்டம் அதிகரிக்கும் சாத்தியம்

தற்போது ஆரம்பித்துள்ள வடகிழக்கு பருவ மழையால்மழைவீழ்ச்சிஅதிகரிக்கும்பட்சத்தில் மொரகஹாதென்ன நீர்தேக்கத்தின் நீர் மட்டம் அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுவதாக இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நீர்மட்டம்ஆகக்கூடியளவுஉயர்வடையும் பட்சத்தில்வான்கதவுகள்திறக்கப்படும்என்றும், இதனால் வான் பாயும் போது அம்பன்கங்கை மற்றும் மகாவலி கங்கைகளில் நீர்மட்டம் உயர்வடையும்என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அவற்றை அண்மித்த பகுதிகளில் வாழும் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## ஆளும்தரப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவுறுத்தல்களை ஆளும்தரப்பு கவனத்திற் கொள்ளவில்லை. அவற்றை அலட்சியம் செய்து தன்னிச்சையாகவே செயற்பட்டது. ஏற்பட்டுள்ள அழிவுகளுக்கு ஆளும்தரப்பே பொறுப்புக்கூற வேண்டும்.

ஆளும்தரப்பின் பலவீனத்தன்மையை வெளிப்படுத்திய ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்குஎதிராகஆளும்தரப்புச் செயற்படுகிறது. இது முற்றிலும் தவறானது. ஆகவே தவறை ஏற்றுக்கொண்டு அவற்றைத் திருத்திக்கொள்ள முயற்சியுங்கள்.

ஆளும்தரப்பு தோல்வியடைந்து விட்டது என்று கிராம மக்கள் குறிப்பிடுகிறார்கள். இதனால்தான் ஆளும் தரப்பினர் பேரிடர் நிலையில்போது மக்கள் மத்தியில் செல்லவில்லை. ஆளும் தரப்பினர் எதிர்க்கட்சியின் உறுப்பினர்களைப் போன்று தொண்டுநிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் உதவிகளைத் தூக்கிச் சென்று அவற்றை பொது மக்களுக்கு விநியோகிக்கிறார்கள்.

தற்போதைய நெருக்கடியான நிலையில் இருந்து மீள்வதற்கு ஆளும்தரப்பு சர்வதேசத்தின்ஒத்துழைப்பைபெற்றுக்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்டுள்ள சிறு மற்றும் நடுத்தர மக்களின் தொழிற்றுறையை பாதுகாப்பதற்கும் ஆளும்தரப்பு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆளும்தரப்பின் அலட்சியத்தால்தான் உயிரிழப்புகள் மற்றும் சொத்து சேதங்கள் தீவிரமடைந்தன. ஆகவே இது குறித்து முறையானவிசாரணைகளைமேற்கொள்ளத் தனிக் குழுவொன்றை நியமிக்க வேண்டும். அதேபோல் நெருக்கடியான நிலையின்போது நீர்பாசனத்துறை திணைக்களம் செயற்பட்ட விதம் குறித்து ஆராயவும் குழு ஒன்றை நியமிக்கவேண்டும் – என்றார்.

## பேரிடர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். ஆனால் எமது செயற்பாட்டை சர்வதேசம் வரவேற்றுள்ளது நிதி மற்றும் பொருளாதார திட்டமிடல் பிரதி அமைச்சர்அனில்பெர்னாண்டோதெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்டத்துறை, சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, வர்த்தகம்மற்றும்உணவு பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி , திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடுஎன்றஅடிப்படையில்மிகமோசமான இயற்கைப் பேரிடரை எதிர்கொண்டோம். பேரிடரால் ஏற்பட்ட உயிரிழப்பை ஒருபோதும் மதிப்பிடமுடியாது. சேதமடைந்தசொத்துக்களை இன்றளவில் மதிப்பிடமுடியாத நிலை உள்ளது. இழப்புக்களை மதிப்பிட்டால்தான் சீரமைப்புக்கானநடவடிக்கைகளைவிரைவாக முன்னெடுக்க முடியும்.

பேரிடரைத் தடுக்க ஆளும்தரப்பு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை, பேரிடரின் பின்னர் ஆளும்தரப்பு முறையாகச் செயற்படவில்லை என்று எதிர்க்கட்சியினர் மாத்திரமே குறை கூறுகின்றார்கள். அது அவர்களின் அரசியல் செயற்பாடாகும். பேரிடரின் பின்னர் ஆளும்தரப்பு செயற்பட்ட விதத்தை உலக நாடுகள் வரவேற்றுள்ளன. நாட்டு மக்கள் உண்மையை அறிவார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியளிப்பதற்குப் போதுமான நிதியை அரசுத் தலைவர் விடுவித்துள்ளார். இலங்கை மத்திய வங்கி இதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கியது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதற்கட்டமாக உதவி நிதி வழங்க உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆகவே ஏற்பட்டுள்ள பாதிப்பில் இருந்து நாட்டு மக்களை வெகுவிரைவில் மீட்போம்.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீட்சிப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த நிலையில்தான் இந்தப் பேரிடருக்குமுகங்கொடுக்கவேண்டியிருந்தது. சிறந்த பொருளாதாரம் மற்றும் நிதி நிலமை இருந்திருந்தால் சர்வதேசத்திடம் நிதி மற்றும் இதர ஒத்துழைப்புக்களை கோர வேண்டிய நிலமை ஏற்பட்டிருக்காது.

அரச நிதி முகாமைத்துவத்துச் சட்டத்துக்கு அமைவாகவே நிதி நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். புதிதாகத் தொடங்கப்பட்ட நிதியம் குறித்தும் எதிர்க்கட்சியினர் மாறுப்பட்ட கருத்துக்களை குறிப்பிடுகிறார்கள். இந்த நிதியத்துக்குரிய சட்ட அங்கீகாரம் வெகுவிரைவில் பெற்றுக்கொள்ளப்படும். நெருக்கடியான நிலையிலும் ஆளும்தரப்பு அரச நிதி முகாமைத்துவ சட்டத்துக்கு அமைவாகவே செயற்படுகிறோம்.

பொருளாதார மீட்சிக்குரிய நடவடிக்கைகள் சிறந்த முறையில் மேற்கொள்ளப்படுகின்றன. 2025 நவம்பர் நடுப்பகுதியில் நாட்டின் மொத்த அரச கடன் பெறுமதி 30.6 ரில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் தேசியக் கடன் 19,480 பில்லியன் ரூபா, வெளிநாட்டுக் கடன் 36.23 பில்லியன் டொலர் உள்ளடங்குகிறது. 2026 ஆம் ஆண்டு முதல் அரச கடன்களை மீள் செலுத்துவதற்குரிய திட்டங்கள் செயற்படுத்தப்படும் – என்றார்.

## யாழ். ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழிவடைந்துள்ளது.

இயற்கை பேரிடரின் பாதிப்புகளைக் குறைப்பதே ஆளும்தரப்பின் பொறுப்பாகும். பல வாரங்களுக்கு முன்னரே பாதிப்பு வரும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தபோதும், ஏன் அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஆளும்தரப்பு ஆராய வேண்டும். முன்னெச்சரிக்கை நடடிக்கைகளை முன்னெடுத்திருந்தால் உயிரிழப்புகளைக் குறைத்திருக்கலாம்.

இதேவேளைஇந்தபேரிடரின்போதுவடக்கு மாகாணத்தில் பாதிப்பு ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் குறைவாக இருந்தாலும் கிளிநொச்சி, வவுனியா, மன்னாரில் அது அதிகமாக இருந்தது. அப்படியிருந்தும் பேரிடர் முகாமை தொடர்பில் ஆளும்தரப்பு நடந்துகொண்ட விதம் தொடர்பில் பல விமர்சனங்கள் இருக்கின்றன. வடக்கில் யாழ். மாவட்டத்திலேயே மிகக்குறைவான பாதிப்புகள் ஏற்பட்டிருந்தபோதும் அதற்கே முன்னுரிமை வழங்கப்பட்டுக் கூட்டங்கள் நடந்தன.

வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் ஏனைய மாகாணங்களிலும் இத்தகைய கூட்டங்கள் நடக்கவில்லை. ஒருங்கிணைக் கப்பட்ட வேலைத்திட்டத்தை நடத்துவதற்கு வடக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் ஆளும்தரப்பு விரும்பவில்லை.

யாழ்ப்பாணத்தில் 14 ஆயிரத்து 459 வீடுகள் ஏதோவொரு வகையில் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் அதனை துப்புரவு செய்யவென முதற்கட்டமாக 361 மில்லியன் ரூபாஒதுக்கப்பட்டுள்ளதாகவும்கூறப்படுகின்றது. இதுதொடர்பில்நாங்கள்ஆழமாகயோசித்தால் நெடுந்தீவில் 2024ஆம் ஆண்டில் 893 வீடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இருக்கின்றது. ஆனால்ஆயிரத்து 216 வீடுகள் அங்கு பாதிக்கப்பட்டுள்ளதாக நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

இதில் சில முரண்பாடுகள் உள்ளன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவி வழங்கப்படக்கூடாது என்று கூறவில்லை. அவர்களுக்கு அது கிடைக்கவேண்டும். ஆனால்இதில்ஊழல்நடக்கக்கூடாது. இதனால் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். இது தொடர்பில் சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

இதனால் சகல பிரதேசங்களிலும் பாதிக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் வெளிப்படுத்தப்படவேண்டும். தேசிய மக்கள் சக்தியினர் தலையிட்டு இந்த விவரங்கள் தவறாக நிரப்பப்பட காரணமாக இருந்துள்ளதாகவும்குற்றச்சாட்டுக்கள்உண்டு. இதன் உண்மைத்தன்மை வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று கேட்கின்றோம்.

இதேவேளை வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பில் வாக்கெடுப்பை கோருகின்றோம். பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி மற்றும் வடக்கு, கிழக்கிற்கு ஒதுக்கப்பட்ட நிதி போதாதமை ஆகிய காரணங்களால் இந்த வாக்கெடுப்பை கோருவோம் – என்றார்.

## பேரிடர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் இடம்பெற்ற பேரிடரை கட்டுப்படுத்த தேவையான அரசியல் தலைமைத்துவம் வழங்கப்படவில்லை என்பது தெளிவாகிறது என எதிர்க்கட்சி உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு, வர்த்தக வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்திஅமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் தற்போதைய நிலமையில் ஆளும்தரப்பின் அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்ட அறிக்கை பொருத்தமில்லை. பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை இயல்புநிலைக்கு கொண்டுவருவதற்குத் தேவையான பணிகளுக்காக குறைநிரப்புப் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் விரைவாக முன்வைத்து அனுமதித்துக்கொள்ளவேண்டும். அதற்கு எதிர்க்கட்சியாக நாங்கள் முழு ஆதரவு வழங்கத் தயாராக இருக்கிறோம்.

அதேநேரம், கடந்த வாரம் நாங்கள் நாடாளுமன்ற அமர்வைப் புறக்கணித்து வெளியில் சென்றோம். நாட்டில் பெரும் பேரிடர் இடம்பெற்றிருக்கையில், பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளைத் தெரிவிப்பதற்கு இடமளிக்க ஆளும்தரப்பு மறுக்கும்போது, ஆளும்தரப்பு தவறான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அது தொடர்பில் சுட்டிக்காட்டும் பொறுப்பு எதிர்க்கட்சிக்கு இருக்கிறது. அதனால் எதிர்க்கட்சியாக நாங்கள் எமது பொறுப்பை சரியாக நிறைவேற்றி வருகிறோம். அதேபோன்று இந்த பேரிடரில் இருந்து நாட்டை மீட்பதற்கு ஆளும்தரப்புக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இந்தப் பேரிடர் தொடர்பில் வளிமண் டலவியல் திணைக்களத்தினால் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரிகளுக்குவரையறுக்கப்பட்டஅதிகாரமே இருக்கிறது. அரச அதிகாரிகள் இந்தப் பொறுப்பைஏற்றுக்கொள்ளஅச்சப்படுகின்றனர். அதற்கு அரசியல் தலைமைத்துவம் வழங்கப்பட்டிருக்கவேண்டும். அதுமுறையாக வழங்கப்பட்டதா என்பதுதான் கேள்வி.

2005இல் பேரிடர் முகாமைத்துவ சட்டம் ஒன்றை நல்லாட்சிக் காலத்தில் நாங்கள் உருவாக்கியுள்ளோம். அதில் பேரிடர் முகாமைத்துவச் சபை இருக்கிறது. அதன் ஊடாக ரணிவ் விக்ரமசிங்க 2023, 2030 காலப்பகுதிக்கான தேசிய பேரிடர் முகாமைத்துவ திட்டம் ஒன்றை தயாரித்து, அதற்கு அனுமதியையும் பெற்றுக்கொண்டிருந்தார்.

அந்தத் திட்டம் தொடர்பில் இந்த ஆளும்தரப்பின் கீழ் கடந்த ஒகஸ்ட்டில் அரசுத் தலைவர் தலைமையில், பேரிடர் முகாமைத்துவச் சபை கூட்டப்பட்டு, கலந்துரையாடப்பட்டிருந்தது. குறித்த சபையின் தலைவராக அரசுத் தலைவர் இருப்பதுடன் இரண்டாவதாக பிரதமர் இருக்கிறார். மூன்றாமவராக எதிர்க்கட்சித் தலைவர் இருக்கிறார்.

அதில் அமைச்சர்கள் 20பேர் இருக்கிறார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 5 பேர் இருக்கிறார்கள். பேரிடரை முகாமைத்துவம் செய்யும் அதிக அதிகாரம் இந்தச் சபைக்கே இருக்கிறது. அதில் குறித்த பேரிடர் முகாமைத்துவத் திட்டத்தையும் அரசுத் தலைவர் அனுமதித்துக்கொண்டார்.

அவ்வாறு இருக்கையில், நாட்டில் பேரிடர் எச்சரிக்கை இருப்பதாக நவம்பர் 17, 18இல் வளிமண்டலவியல் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டபோதும், அரசுத்தலைவர் ஏன் பேரிடர் முகாமைத்துவச் சபையைக் கூட்டி, இதுதொடர்பில் கலந்துரையாடவில்லை? அவ்வாறு கூட்டி இருந்தால், அங்கு அனைத்து தரப்பினரும் கலந்துரையாடி தீர்மானம் எடுத்திருந்தால், இந்தப் பேரிடரைச் சரியாக முகாமைத்துவம் செய்து, பாதிப்பை குறைத்துக்கொண்டிருக்கலாம்.

சபையைக் கூட்டி இருந்தால், இடர் நிலையைப் பிரகடனப்படுத்தி இருக்கலாம். அதன் மூலம் ஏற்பட்டிருக்கும் பேரிடரைக் குறைத்துக்கொண்டிருக்கலாம். ஆனால் அதனைச் செய்யவில்லை. இதன் மூலம், பேரிடர் முகாமைத்துவத்திற்குச் சரியான அரசியல்தலைமைத்துவம்வழங்கவில்லை என்பது தெளிவாகிறது என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பாதிக்கப்பட்ட தோட்ட மக்களுக்கு முன்னுரிமை அளிப்பது அவசியம்

## நாடாளுமன்றில் இராதாகிருஷ்ணன் எம்.பி. வலியுறுத்து

பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள தோட்ட மக்களுக்கு முன்னுரிமை வழங்குங்கள். வீடுகள் இன்றி தொழிலுக்கும் போக முடியாது. எனவே அவர்களுக்கு நிரந்தர வீடுகளை வழங்க நடவடிக்கை எடுங்கள். விவசாயத்துறையில் நுவரெலியா முழுமையாக அழிவடைந்துள்ளது. எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குங்கள் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணி உறுப்பினர் இராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு, வர்த்தக வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலைவிவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஏற்பட்ட பேரிடரால் பலர் உயிரிழந்துள்ளதுடன். பல குடும்பங்கள் நிர்க்கதியாகியுள்ளன. நுவரெலியா மாவட்டத்தில் 123 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், 6 ஆயிரத்து 959 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இங்கு 89 இறப்புக்கள் பதிவாகியுள்ளதுடன், 73 பேர் காணாமல் போயுள்ளனர். இந்த மக்களுக்கு எவ்வாறான உதவிகளைச் செய்யலாம் என்ற எண்ணம் ஆளும்தரப்பிடம் இருக்கவேண்டும். ஆளும்தரப்பின் அசமந்தப் போக்கே இந்தப் பேரிடரிற்குக் காரணமாகும். இதனைத் தவிர்த்திருக்கலாம்.

இதேபோன்று பதுளை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனைக் கட்டியெழுப்ப எத்தனைவருடங்கள்போகுமென்றேதெரியவில்லை. இந்த மக்களுக்கான உடனடித் தேவைகளை இந்த ஆளும்தரப்பு நிறைவேற்ற வேண்டும்.

நுவரெலியாவில் தோட்டத்துறை, விவசாயத்துறை மற்றும் சுற்றுலாத்துறை என மூன்று பிரிவுகளில் மக்கள் தொழில் புரிகின்றனர். தோட்டத்துறையில் அதிகமான தோட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. கந்தபொலவில்இருந்துராகலை செல்ல முடியாதவாறு வீதிகள் சேதமடைந்துள்ளன.

இப்போது முகாம்களில் இருப்பவர்களை வீடுகளுக்கு போகுமாறு தோட்ட முகாமையாளர்கள் கூறுகின்றனர். அச்சம் காரணமாகவே மக்கள் முகாம்களுக்கு வந்திருக்கின்றனர். இவர்களைப் பாதுகாக்கவேண்டும். இவர்களுக்குப் பாதுகாப்பான இடங்களில் காணிகளை வழங்கி வீடுகளை அமைத்துக்கொடுங்கள்.

இவர்களுக்கு முன்னுரிமை வழங்குங்கள் என்றே கோருகின்றோம். வீடுகள் இன்றி தொழிலுக்கும் போக முடியாது. அவர்களுக்கு அதற்கானஉதவிங்களைவழங்கநடவடிக்கைஎடுக்க வேண்டும். நுவரெலியா மாவட்டத்தில் வீதிகளை அமைத்துக்கொடுங்கள். நீர் விநியோகத்தை செய்யுங்கள்.

அத்துடன்சுற்றுலாத்துறைக்குதொடருந்துகள்கள் அவசியமாகும். இதனால் தொடருந்துப் பாதைகளைச் சீரமைத்து சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க வேண்டும். எமது அயல்நாடான இந்தியா எங்களுக்கு உடனடியாக உதவிகளை வழங்கியுள்ளது. இந்தியாவிடம் தொடருந்துப் பாதைகளைச் சீரமைக்க உதவிகளைக் கேட்க முடியும்.

விவசாயத்துறையில் நுவரெலியா முழுமையாக அழிவடைந்துள்ளது. எனது தோட்டத்தில் ஐந்து ஏக்கர் பகுதியும் அழிந்துள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டை வழங்குங்கள். அவர்களுக்கு உதவிகளை வழங்குங்கள். இல்லையென்றால் எதிர்காலத்தில் மரக்கறி கிடைக்காமல் போகலாம். இதேவேளை தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் உறுதியளித்த சம்பளத்தை வழங்குமாறும் கோருகின்றேன்.

வெளிநாடுகள் இலங்கைக்கு உதவிகளை வழங்குகின்றன. அதன் மூலம் நாட்டைக் கட்டியெழுப்புவோம். அரசியலை பின்னர் செய்வோம். நாங்கள் அனைவரும் ஒன்றாக கட்டியெழுப்புவோம் என்றார்.

### மக்களின் வாழும் உரிமையை உறுதிப்படுத்தத் தவறிய

# அநுரவை 5 ஆண்டுகள் சிறையில் தள்ள முடியும்

## உதய கம்மன்பில எதிர்வுகூறல்

அரசமைப்பிற்கமைய மக்களின் வாழும் உரிமையை உறுதிப்படுத்தத் தவறியமைக்காக அரசுத் தலைவரை ஐந்து ஆண்டுகள் வரை சிறைத் தண்டனைக்கு உட்படுத்த முடியும். மக்களின் உயிர் வாழும் உரிமையை அலட்சியம் செய்து அரசுத் தலைவர் உட்பட முழு அமைச்சரவையும் குற்றமிழைத்துள்ளதாக பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவதித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் உயிர் வாழும் உரிமையை அலட்சியம் செய்து அரசுத் தலைவர் உட்பட முழு அமைச்சரவையும்குற்றமிழைத்துள்ளது.அரசமைப் பிற்கமைய மக்களின் வாழும் உரிமையை உறுதிப்படுத்தத் தவறியமைக்காக அரசுத் தலை வரை ஐந்து ஆண்டுகள் வரை சிறைத் தண்டனைக்கு உட்படுத்த முடியும்.

வரலாற்றில் பதிவான மிகப்பெரிய பேரழிவை கடந்தவாரம்நாம்சந்தித்தோம். ஒட்டுமொத்த இலங் கையும் ஒரே நேரத்தில் பாதிக்கப்பட்ட இத்தகைய பேரழிவைப்பற்றி இதற்கு முன்நாம்கேள்விப்பட்ட தில்லை.

இயற்கைப் பேரிடர் ஏற்படுவதை ஆளும்தரப் பால் தடுக்க முடியாவிட்டாலும், அதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைப்பது ஆளும்தரப்பின்பொறுப்பாகும். 2016ஆம்ஆண்டு வெள்ளம் ஏற்பட்டபோது தற்போதைய சபை முதல்வர்பிமல்ரத்நாயக்கவேஇதனைக்கூறினார். எனவே, இந்தப் பேரழிவினால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைக்க தற்போதைய ஆளும்தரப்பு தேவையான நடவடிக்கைகளை எடுத்ததா என்பதைக் கண்டறிந்து மக்களுக்குத் தெரிவிப்பதுஎதிர்க்கட்சியாகியநமதுகடமையாகும்.

நவம்பர் 12 முதல், வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்திருந்தது. குறிப்பாக நவம்பர் 25 பி.பி.சி. இது குறித்த எச்சரிக்கையை வழங்கியிருந்தது. 500 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி ஏற்படக்கூடும் என்றும் அந்தச் செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஆளும்தரப்பு அது தொடர்பில் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்னெடுக்காததன் காரணமாகவே இன்று நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் உயிரிழந்திருக்கின்றனர்.

தேசிய இடர் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் தேசியப் பேரழிவு நிலையை அறிவிக்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவில்லை. பேரழிவை எதிர்கொள்ள ஆளும்தரப்பும் எதிர்க்கட்சியும் இணைந்த தேசிய இடர் சபையை அரசுத் தலைவர் எந்தவொரு தருணத்திலும் கூட்டவில்லை.

அவ்வாறு செய்திருந்தால், முழு நாடும் கட்சி வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் இந்தச் செயல்பாட்டில் பங்கேற்றிருக்கும். குறிப்பாக, பேரழிவை எதிர்கொண்ட அனுபவம் இல்லாத அரசாங்கமாக இருந்ததால், முன்னர் இடர் முகாமைத்துவத்தில் அனுபவம் கொண்ட எதிர்க்கட்சியின் அனுபவத்தை நிலமையைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தும் வாய்ப்பு இருந்தது. ஆனால் அதற்கும் ஆளும்தரப்பு எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை என்றார்.

# நீர்ப்பாசன அமைச்சர் பதவி விலகவேண்டும்

## சாமர சம்பத் எம்.பி. வலியுறுத்து

நீர்த்தேக்கத்தில் இருந்து நீரை முறையாக விடுவிக்க நீர்ப்பாசன அமைச்சர் நடவடிக்கை எடுத்திருந்தால் மக்கள் நீரில் மூழ்கி உயிரிழப்பை தடுத்திருக்கலாம். தனது பொறுப்பை நிறைவேற்ற தவறிய நீர்ப்பாசன அமைச்சர் பதவி விலகவேண்டும். அவரின் இந்த தவறுக்கு நிச்சயமாக ஜம்பர் அணிவிக்கப்படுவாரென எதிர்க்கட்சி உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு, வர்த்தக வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடம்பெற்ற வெள்ளப்பெருக்கில் பதுளை மாவட்டத்தில் வெள்ளையர்கள் அமைத்த பல பாலங்கள் சேதமடைந்துள்ளன. நுவரெலியா பதுளை பிரதான வீதியை திறக்க முடியாமல் இருக்கிறது. தொடருந்துகள் சேவைகள் 6 மாதங்களுக்காவது ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் இதனை விளையாட்டாக யாரும் கருதக்கூடாது. அங்கு ஏற்பட்ட மண்சரிவுக்கு யாரையும் குற்றம் சொல்ல முடியாது.

அதேபோன்று 6 மாவட்டங்களில் இருந்து சிகிச்சைக்கு வரும் மஹியங்கனை பிரதான வைத்தியசாலை முற்றாக சேதமடைந்திருக்கிறது. அதேபோன்று மஹியங்கனை நீதிமன்றம், பொலிஸ் நிலையம் விகாரை என அனைத்தும் சேதமடைந்துள்ளன. இந்த பொறுப்பில் இருந்து யாருக்கும் தப்பிக்க முடியாது.

மகாவலி திட்டம் அமைத்து 46 வருடங்கள் ஆகின்றன. இவ்வாறான பாதிப்பு ஏற்படவில்லை. ரன்தொனிகல நீர்த்தேக்கத்தில் இருந்து நீரை முறையாக விடுவித்திருந்தால் இந்த அழிவு மஹியங்கனைக்கு ஏற்பட்டிருக்காது. அதனால் நீர்ப்பாச அமைச்சர் இதுதொடர்பில் தேடிப்பார்த்து நடவடிக்கை எடுக்க தவறியுள்ளார். அவர் தனது பொறுப்பை நிறைவேற்ற தவறியுள்ளதால், அவர் பதவி விலகவேண்டும்.

பதுளை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அழிவில் இருந்து மீள கட்டியெழுப்புவது என்பது இலகுவான விடயமல்ல. அங்குள்ள வயல் நிலையங்களில் பெரும்ளவில் மண் நிரைந்துள்ளது. அதனை மீள அகற்றி அங்கு வயல் விவசாயம் செய்வது சாத்தியமில்லை.

அதனால் எதிர்காலத்தில் வெளிநாடுகளில் இருந்துதான் அரிசி இறக்குமதி செய்ய வேண்டி ஏற்படும். அதேபோன்று வெங்காய பயிர் நிலங்கள் அழிவடைந்துள்ளன. ஏற்பட்டுள்ள இந்த பாதிப்பு, கொவிட் தொற்றினால் ஏற்பட்ட சேதத்தைவிட பாரதூரமானது.

ஜே.ஆரின் காலத்தில் ஜூலை கலவரம் ஏற்பட்டது. எல்,ரிரியும் ஜேவிபியும் இணைந்து பிரேமதாசவின்ஆளும்தரப்பைஇல்லாமலாக்கியது. சந்திரிக்காவின் காலத்தில் சுனாமி வந்தது, மஹிந்தவுக்கு யுத்தம், மைத்திரிக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கோத்தபாயவுக்கு கொவிட் பேரிடர்ம்,தற்போது அநுரகுமாரவுக்கு வெள்ளமும் மண்சரிவும் ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு எமது நாட்டு தலைவர்களுக்கு வரிசையாக ஏதாவது ஒரு அழிவு ஏற்பட்டிருக்கிறது. அதனால் ஏற்பட்டிருக்கும் இந்த பாதிப்பில் இருந்து நாட்டை மீட்க நடவடிக்கை எடுக்க தவறினால், ஆளும்தரப்புக்கு என்ன நடக்கும் என தெரியாது.

எவ்வாறு இருந்தாலும் ஏற்பட்ட இந்த பாதுப்புக்கு நீர்ப்பாசன அமைச்சர் நிச்சயமாக ஜம்பர் அணியவேண்டிவரும். அவருக்கு ஜம்பர் அணிவிப்போம். அவரால்தான் இந்த பேரிடர்த்தில் மக்கள் உயிரிழக்க காரணமாகும் என்றார்.

# அவசரகாலச் சட்டத்தால் தவறு ஏதும் இடம்பெறாது

## அமைச்சர் விஜித ஹேரத் உறுதியளிப்பு

அவசரகால சட்டத்துக்குரிய ஒழுங்குவிதிகள் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தவறான நிலமை ஏதும் தோற்றம் பெறாது. பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் பிரகாரமே அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதென அயலுறவுத்துறை, வெளிநாட்டலுவல்கள் மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்டத் துறை, சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி , திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேரிடர் நிலமையின்போது அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்திய முறைமை குறித்து எதிர்க்கட்சியின் உறுப்பினர் அஜித் பி பெரேரா கேள்வியெழுப்பினார். அவசரகால நிலமையை அமுல்படுத்துமாறு எதிர்க்கட்சியினரும் வலியுறுத்தினார்கள். அதற்கமைவாகவே அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இந்த அவசரகால சட்டம் 1959 ஆம் ஆண்டு பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரகாரம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் இடர் நிலமையைக் கருத்திற்கொண்டு அரசுத் தலைவருக்குவழங்கப்பட்டுள்ளதத்துவங்களுக்கு அமைவாகவே அவசரகாலச் சட்டம் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அவசரகால சட்டத்துக்குரிய ஒழுங்குவிதிகள் நாடாளுமன்றத்துக்கு இன்று (நேற்று) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஒழுங்குவிதிகள் இன்று நிறைவேற்றப்படும். அதனைத் தொடர்ந்து அது சட்டரீதியாக அங்கீகரிக்கப்படும். தவறான நிலமை ஏதும் தோற்றம் பெறாது. பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரகாரமே அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மண்சரிவு அபாயப் பகுதிகளுக்கு உடன் திரும்பிச் செல்லவேண்டாம்

## தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவிப்பு

நாடளாவிய ரீதியில் கடந்த ஒரு வார காலமாக பெய்த கடும் மழை காரணமாக மலைப்பாங்கான பிரதேசங்கள் ஈரப்பதனுடையதாகவுள்ளன. இன்று முதல் வடகீழ் பருவ பெயர்ச்சி மழை எதிர்பார்க்கப்படுவதால் அப்பிரதேசங்களில் மண் சரிவு அபாய எச்சரிக்கை நீங்கவில்லை. எனவே அவ்வாறான பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து பாதுகாப்பு முகாம்களில் இருப்பவர்கள் தற்போது தமது இருப்பிடங்களுக்கு திரும்ப வேண்டாம் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் வசந்த சேனாதீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவு:

கண்டி, கேகாலை, குருணாகல் மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் 44 பிரதேச செயலகப்பிரிவுகளுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது. கண்டியில் கங்காவத்த கோரளை, தெல்தோட்டை, தொலுவ, தொம்பே, தும்பனை, மெததும்பர, மினிப்பே, பஹதஹேவாஹெட்ட, ஹட்டிநுவர, கங்கா இஹல கோரள, அக்குரணை, உடுநுவர, பன்வில, பஹதும்பர, குண்டசாலை, பஸ்பாகே கோரள, ஹதரலியத்த, உடுதும்பர, பூஜாபிட்டிய, ஹரிஸ்பத்துவ மற்றும் உடபலாத்த ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தில் கலிகமுவ, அரநாயக்க, கேகாலை, மாவனல்ல, ரம்புக்கனை, வரகாபொல, யட்டியாந்தோட்டை மற்றும் புளத்கொஹூபிட்டிய ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு சிவப்பு எச்சரிக்கையும் தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளது.

குருணாகல் மாவட்டத்தில் நாரம்மல, பொல்கஹாவெல, மாவத்தகம, ரிதீகம, மல்லவபிட்டிய மற்றும் அலவ்வ பிரதேச செயலகப்பிரிவுகளுக்கும், மாத்தளையில் அம்பன்கங்க கோரளை, நாவுல, மாத்தளை, பல்லேபொல, உக்குவெல, லக்கல பல்லேகம, யட்டவத்த, ரத்தோட்டை மற்றும் வலிகமுவ பிரதேச செயலகப்பிரிவுகளுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர பதுளை, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலுள்ள 29 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு விடுக்கப்பட்டுள்ள இரண்டாம் கட்ட மண்சரிவு எச்சரிக்கையும் நீடிக்கப்பட்டுள்ளது. மேலும் கொழும்பு, காலி, கம்பஹா, களுத்துறை, மாத்தறை, மொனராகலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் 26 பிரதேச செயலகப்பிரிவுகளுக்கு விடுக்கப்பட்டுள்ள மூன்றாம் கட்ட மண்சரிவு எச்சரிக்கையும் நீடிக்கப்பட்டுள்ளது.

அபாயகரமான நிலைமை இன்னும் நீங்கவில்லை. எனவே, வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, தற்போது தங்கியிருக்கும் பாதுகாப்பான இடங்களிலேயே தொடர்ந்து இருக்குமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம். பாறை விழுதல், நிலச்சரிவு மற்றும் அச்சுறுத்தும் நிலைமைகள் குறித்து தொடர்ந்து தகவல்கள் கிடைக்கின்றன.

வடகிழக்கு பருவமழை விரைவில் தொடங்கவுள்ளதால், 50 மி.மீ அல்லது 100 மி.மீ மழையைத் தாண்டினால், ஏற்கனவே நிலச்சரிவுக்கான அறிகுறிகள் உள்ள இடங்களில் ஆபத்து மீண்டும் தீவிரமடைய அதிக வாய்ப்புள்ளது. எனவே, அதிக ஆபத்துள்ள பகுதிகளில் வசிப்பவர்கள், அந்தப் பகுதிகளில் ஆய்வு நிறைவடையும் வரை தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் செல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த ஆய்வுகள் மாவட்ட செயலாளர்களின் முன்னுரிமைப்படி நடைபெறுவதால், இதற்குச் சில நாட்கள் ஆகலாம்.

சுவர்களில் விரிசல் போன்ற சேதங்கள் குறித்து தெரிவிக்கப்பட்டால், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகள் ஆய்வு செய்து, உரிய நிறுவனங்கள் தேவையான நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்துவார்கள் - என்றார்.

# பேரிடர் பாதித்த மக்களுக்கு இன்று முதல் பண உதவி

பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிதி உதவியளிக்க 10 பில்லியன் ரூபா முதற்கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ளது. சகல பிரதேச செயலகங்கள் ஊடாகவும் இந்த நிதி உதவி இன்று முதல் வழங்கப்படும் எனப் பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்டத்துறை, சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி , திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு என்ற ரீதியில் மிக மோசமான பேரிடரை எதிர்கொண்டுள்ளோம். இழப்புக்களை மதிப்பிட முடியாத நிலை உள்ளது. முப்படையினரும், பொலிஸாரும், நாட்டுமக்களும் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கு மீட்புப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது எதிர்கட்சியினர் அரசியல் செய்கிறார்கள். நவம்பர் 25 முதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் சிறந்த முறையில் எடுக்கப்பட்டுள்ளன.

பேரிடர் நிலை ஏற்பட்ட நாளில் இருந்து முப்படையினரும், பொலிஸாரும் தமது உயிரைப் பொருட்படுத்தாமல் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்கள். பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி உதவிம் வழங்குவதற்கு 10 பில்லியன் ரூபா முதற்கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ளது. சகல பிரதேச சபைகள் ஊடாகவும் நிதி உதவி இன்று முதல் வழங்கப்படும். நெருக்கடி நிலையின்போது ஒத்துழைப்பு வழங்குவதாக எதிர்கட்சியினர் குறிப்பிடுகிறார்கள். ஆனால் எவ்வித ஒத்துழைப்புக்களையும் வழங்காமல் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள்.

முழுநாடும் துயரத்தை எதிர்கொண்டுள்ளபோது எதிர்க்கட்சியினர் சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடுகிறார்கள். போலியான விடயங்களை சமுகமயப்படுத்தாமல் இருப்பதே அவர்கள் வழங்கக்கூடிய மிகப்பெரிய ஒத்துழைப்பாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார்.

## பொதுஜன பெரமுன எம்.பியின் அறிவிப்பு

# அரசு எனக்கு 'கப்' வாகனம் வாங்கித்தரவே வேண்டாம்

## அந்த நிதியை சுகாதார அமைச்சுக்குக் கொடுங்கள்

*225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் 'கப்' ரக வாகனம் வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயின் எனக்கு கெப் வாகனம் கிடைக்க வேண்டும். ஒரு கெப் வாகனத்தின் விலை 210 இலட்சம் ரூபா என்றும், அதன் காப்புறுதிப் பெறுமதி 10 இலட்சம் ரூபா என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கு இந்த 'கெப்' வேண்டாம். அந்த நிதியை சுகாதார அமைச்சுக்கு மருந்து கொள்வனவுக்கு வழங்குங்கள் என்று சபாநாயகரிடம் உத்தியோகபூர்வமாக வலியுறுத்தவுள்ளேன் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சானக தெரிவித்தார்.*

*நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்டத்துறை, சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி , திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:*

*இயற்கைப் பேரிடரால் ஏற்பட்ட பேரிழப்பு கவலைக்குரியது. தற்போதைய நெருக்கடியான நிலையில் ஆளும்தரப்பை நெருக்கடிக்குள்ளாக்க நாங்கள் விரும்பவில்லை. இருப்பினும் இந்நிலையிலும் ஆளும்தரப்பு தான்தோன்றித்தனமாகவே செயற்படுகிறது. எதிர்க்கட்சிகளுடன் எவ்வித பேச்சுக்களிலும் ஈடுபடவில்லை. ஆனாலும் எம்மால் இயலுமான வகையில் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உதவியளித்துள்ளோம்.*

*225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் 'கப்' ரக வாகனங்களை வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயின் எனக்கும் வாகனம் கிடைக்க வேண்டும். ஒரு 'கப்' வாகனத்தின் விலை 210 இலட்சம் ரூபா என்றும், அதன் காப்புறுதிப் பெறுமதி 10 இலட்சம் ரூபா என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கு இந்தக் 'கப்' வேண்டாம். அந்த நிதியைச் சுகாதார அமைச்சின் மருந்துக் கொள்வனவுக்கு வழங்குங்கள் என்று சபாநாயகரிடம் உத்தியோகபூர்வமாக வலியுறுத்தவுள்ளேன்.*

*அதேபோல் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச மற்றும் எனது மாதச் சம்பளத்தை பாடசாலை மாணவர்களுக்கு உரிய எழுது பொருட்கள் வழங்கும் 'ஆதரய' திட்டத்துக்கு ஒதுக்கவுள்ளோம்.*

*இந்தப் பேரிடர் குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் முன்கூட்டியதாக அறிவுறுத்தியும் ஆளும்தரப்பு எவ்வித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நாட்டின் தற்போதைய நிலைமைக்கு பொருத்தமானதாக அமையாது. ஆகவே புதிய வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் குறித்து ஆளும்தரப்பு கவனம் செலுத்தவேண்டும் - என்றார்.*

# எச்சரிக்கைகளைப் புறக்கணித்து மக்களின் உயிர்கள் பலியெடுப்பு

## ஆளும்தரப்பு மீது ஐ.ம.ச. உறுப்பினர் பாய்ச்சல்

*இயற்கைப் பேரிடரால் ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் சொத்து இழப்புக்கு ஆளும்தரப்பே பொறுப்புக்கூறவேண்டும். காலநிலை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்த முன்அறிவித்தல்களை அலட்சியப்படுத்தி ஆளும்தரப்பு மக்களின் உயிகளைப் பலியெடுத்துள்ளதென ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.*

*நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்டத்துறை, சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு, நிதித் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:*

*இந்தப் பேரிடரின் பாதிப்பை குறைத்துக் கொள்வதற்கு ஆளும்தரப்பு எவ்வித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இலங்கை இவ்வாறான பேரிடரை எதிர்கொள்ளப் போவதாக சர்வதேச செய்தி நிறுவனங்கள் முன்கூட்டியதாகவே அறிக்கை வெளியிட்டன. அதேபோன்று சர்வதேச காலநிலை மாநாடுகளிலும் இலங்கை பெரும் காலநிலைப் பேரிடரை எதிர்கொள்ளப் போவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த மாநாடுகளில் ஆளும்தரப்பின் பிரநிதிகளும் கலந்துக் கொண்டுள்ளார்கள். ஆனால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.*

*இயற்கைப் பேரிடரால் ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் சொத்து இழப்புக்கு ஆளும்தரப்பே பொறுப்புக்கூறவேண்டும். காலநிலை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்த முன்அறிவித்தல்களை அலட்சியப்படுத்தி ஆளும்தரப்பு மக்களின் உயிகளைப் பலியெடுத்துள்ளது.*

*முழு நாட்டையும் இயற்கை பேரிடர் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் நிலையில் நவம்பர் 28 அரச விடுமுறை என்ற அறிவிப்பு வெளியானது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி கிட்டுவதைத் தடுத்தது. பேரிடருக்கு முன்னரான காலப்பகுதியிலும் ஆளும்தரப்பு தோல்வியடைந்துள்ளது. பேரிடருக்கு பின்னரும் ஆளும்தரப்பு தோல்வியடைந்துள்ளது.*

*பேரிடரின்போது ஒட்டுமொத்த மக்களும் ஒன்றிணைந்து பாதிக்கப்பட்ட தம்மவர்களுக்கு உதவிகளை வழங்கியுள்ளார்கள். இது இலங்கையர்களின் மனிதாபிமானத்தை வெளிப்படுத்தியுள்ளது. இதற்கு உயரிய கௌரவத்தை வழங்குகிறோம் - என்றார்.*

# இலங்கையின் பேரிடர் மீட்புக்கு உதவும் வழி பற்றி ஆராய்கிறது நாணய நிதியம்

பேரிடருக்கு முகங்கொடுத்திருக்கும் இலங்கையின் மீட்சிக்கு உதவக்கூடிய மேலதிக வழிமுறைகள் தொடர்பில் தாம் ஆராய்ந்துவருவதாகவும், பேரிடரின் பின்னரான இலங்கையின் பொருளாதார நிலைவரம் குறித்த மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டவுடன் தாம் உதவக்கூடிய வழிமுறைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிவிக்கப்படும் எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜூலி கொஸாக் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டம் குறித்த 5 ஆம் கட்ட மீளாய்வு தொடர்பில் எட்டப்பட்ட உத்தியோகத்தர் மட்ட இணக்கப்பாடு அடுத்தகட்ட ஒப்புதலுக்காக டிசெம்பர் 15 சர்வதேச நாணய நிதியத்தின் இயக்குனர் சபையினால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருப்பதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் வியாழக்கிழமை (4) வொஷிங்டனில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் மாதாந்தச் செய்தியாளர் சந்திப்பின்போது இலங்கை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே ஜூலி கொஸாக் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை பேரிடருக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களைப் பூர்த்திசெய்வதற்கு வழங்கப்பட்டிருக்கும் கால அவகாசம் மேலும் இலகுபடுத்தப்படுமா எனவும், இப்பேரழிவின் காரணமாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சி தொடர்பான எதிர்வுகூறல் மற்றும் முன்னுரிமைக்குரிய மறுசீரமைப்புக்களில் மாற்றங்கள் ஏற்படுமா எனவும், இவ்வேளையில் சர்வதேச நாணய நிதியம் இலங்கையை எவ்வாறு கையாளப்போகிறது எனவும் செய்தியாளர்களால் கேள்விகள் எழுப்பப்பட்டன. அவற்றுக்குப் பதிலளித்த ஜூலி கொஸாக் மேலும் தெரிவித்ததாவது:

சூறாவளியினால் ஏற்பட்ட மனிதாபிமான, சமூக மற்றும் பொருளாதார சேதங்களை மதிப்பீடு செய்வதை முன்னிறுத்தி இலங்கை ஆளும்தரப்பு, அபிவிருத்திப் பங்காளிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய தரப்புக்களுடன் மிகநெருக்கமாகப் பணியாற்றி வருகிறோம். வெள்ளப்பெருக்கினால் இலங்கையின் பல பாகங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதுடன் பெரும் எண்ணிக்கையானோர் உயிரிழந்திருக்கும் நிலையில், அதன் விளைவாக பொருளாதார நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டிருக்கும் என எதிர்பார்க்கிறோம். பேரிடரின் பின்னரான பாதிப்புக்கள் தொடர்பான மதிப்பீடு பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர், எம்மால் இலங்கையின் பொருளாதார நிலைவரம் குறித்த சரியான மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

அதேபோன்று விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்திட்டத்தின் கீழ் நாம் இலங்கையின் மீட்சி, மறுசீரமைப்பு மற்றும் மீளெழுச்சிக்குத் தொடர்ந்து ஆதரவளித்து வருகிறோம். அத்திட்டம் தொடர்பான 5 ஆம் கட்ட மீளாய்வு குறித்து இலங்கை ஆளும்தரப்புக்கும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுக்கும் இடையில் கடந்த ஒக்டோபர் மாதம் உத்தியோகத்தர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டது. இந்நிலையில் இலங்கையின் மீட்சிக்கு உதவக்கூடிய மேலதிக வழிமுறைகள் தொடர்பில் நாம் ஆராய்ந்துவருகிறோம். நாணய நிதியத்தின் இயக்குநர் சபைக் கூட்டம் டிசெம்பர் 15 நடைபெறவுள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையின் பொருளாதார நிலைவரம் தொடர்பான மதிப்பீடு நிறைவடைந்ததும், எவ்வாறு உதவிகளை வழங்கமுடியும்என்பது குறித்து ஆராய்ந்து, அதுபற்றிய விவரங்களைப் பின்னர் அறிவிப்போம் -என்றார்.

# பாதீடு நிறைவேற்றம்

அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஆளும்தரப்பின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் 3 ஆம் வாசிப்பு 157 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு ஆதரவாக 158 வாக்குகள் அளிக்கப்பட்ட துடன் எதிராக 1 வாக்கு மட்டுமே அளிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 157 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

3 ஆம் வாசிப்புக்கு ஆதரவாக அரச தரப்பினர் வாக்களித்த நிலையில் எதிராக தமிழ் தேசிய மக்கள் முன்னணி மட்டுமே வாக்களித்தது. ஏனைய எதிர்க்கட்சிகள் எதுவும் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

2026 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தை நிதியமைச்சரான அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கடந்த நவம்பர் 7 ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருந்தார்.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு 14 ஆம் திகதி இடம்பெற்ற நிலையில் ஆதரவாக 160 பேரும் எதிராக 42 பேரும் வாக்களித்தனர்.

இதனையடுத்து குழுநிலை விவாதம் நவம்பர் 15ஆம் திகதி முதல் டிசம்பர் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையான 17நாட்கள் நடைபெற்ற நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி. யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வாக்கெடுப்பைக் கோரினார் .இதனையடுத்தே வாக்கெடுப்பு இடம்பெற்றது.

நாட்டில் கடந்த வாரம் நிலவிய மிக மோசமான இயற்கை பேரிடர்த்தால் முழு நாடும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மூன்றாம் வாசிப்பின் போது வாக்கெடுப்பு கோராமல் இருப்பதற்கும், அவ்வாறு ஏனைய எதிர்க்கட்சிகளின் சில வேளை வாக்கெடுப்பு கோரினால் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் இருக்க தீர்மானித்துள்ளதாகவும் ஏற்கனவே எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக தெரிவித்திருந்தார்.

அதேபோன்று இலங்கைத் தமிழரசுக் கட்சியும் வாக்கெடுப்பு கோரும் நிலைப்பாட்டில் இல்லை யென தெரிவித்திருந்த நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வாக்கெடுப்பைக் கோரியிருந்தார்.

அதனடிப்படையில் மாலை 7,25 மணியளவில் இலத்திரணியல் முறையில் இடம்பெற்ற வாக்களிப்பில்,அரசாங்கத்துடன் இணைந்து காதர் மஸ்தான் மற்றும் ஜீவன் தொண்டமான் ஆதரவாக வாக்களித்ததுடன் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. மாத்திரம் எதிர்த்து வாக்களித்திருந்தார். அதனடிப்படையில் வரவு செலவு திட்டத்தின் 3ஆவது வாசிப்பு 157மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.-



காலைக்கதிர் Kalaikkathir


# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.12.2025இல் வெளியிடப்பெற்றது